Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 517 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (10.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 08 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே, சமன் அபேசிறிவர்தன, கிரிஷான் காரியவசம், ஏஷான் தசநாயக்க

# அரச ஆதரவுடன்

# காட்டுமிராண்டித்தனம்!

## கொழும்பில் நேற்று அரங்கேறியது

- பிரதமருக்கு ஆதரவு தெரிவித்த குண்டர்கள் வன்முறை
- அலரிமாளிகை - ஜனாதிபதி செயலக வளாக கூடாரங்கள் அடித்து உடைப்பு
- இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டாலும் குண்டர்களை கட்டுப்படுத்த முடியவில்லை
- சஜித், அநுரகுமார நேரடியாக சென்று பார்வை
- நடுவீதியில் பொலிஸார் பார்த்திருக்க போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்

•யோ.தர்மராஜ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று கொழும்புக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் நேற்று மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில், கிட்டத்தட்ட 150இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அத்துடன், அலரிமாளிகை முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம' கூடாரம் துவம்சம் செய்யப்பட்டதுடன் காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

**நடந்தது என்ன ?**

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகக்கூடாதென வலியுறுத்தி நேற்றுக்காலை நாட்டின் நாலாபுறங்களிலும் இருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் அலரி மாளிகைக்கு வந்திருந்தனர். நாட்டில் தீவிர எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்றபோதும் பெருமளவு பஸ்களில் இந்த மக்கள் அழைத்து வரப்பட்டனர்.

பிரதமர் அங்கு உரையாற்றிய பின்னர், கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அலரி மாளிகையின் முன்பாக காலிவீதியின் பக்கம் சென்று அங்கு கூடாரம் அமைத்து தங்கியிருந்த மைனா கோ கம வளாகத்தின் மீது சரமாரியாகத் தாக்குதல் தொடுத்து அவற்றை துவம்சம் செய்தனர். அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

02 பக்கம்

## சடலமாக மீட்கப்பட்ட அமரகீர்த்தி எம்.பி



பொலன்னறுவை மாவட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது உதவியாளர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

நிட்டம்புவ பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்த ஆர்ப்பாட்டமொன்றின்போது எம்.பியும் அவரது உதவியாளரும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் அதன் பின்னர் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நாட்டில் தீயாக பரவிய வன்முறை

## அடித்து நொறுக்கப்பட்ட ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் இல்லங்கள்

•யோ.தர்மராஜ்

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வன்முறைத் தாக்குதலையடுத்து நாடு முழுவதும் ஆங்காங்கே கட்டுக் கடங்காமல் கலவரங்கள் வெடித்தன. பல பகுதிகளில் அரசியல்வாதிகளின் வீடுகள், அலுவலகங்கள் மற்றும் வாகனங்களும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வந்த ஆதரவாளர்களால் கொழும்பு அலரிமாளிகைக்கு முன்னாலிருந்து 'மைனா கோ கம'... 02 பக்கம்



## கலவரங்களுக்கு மத்தியில் பதவி துறந்த மஹிந்த

•யோ.தர்மராஜ்

கொழும்பில் இடம்பெற்ற குழப்பத் தையடுத்து, மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக தன்னுடைய பதவியை நேற்று (09) இராஜினாமா செய்தார்.

நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையும் பதவி விலகுமாறு ஜனாதிபதி கடும் அழுத்தம் கொடுத்தபோதிலும் பிரதமர் பதவி விலகுவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. 02 பக்கம்

## சவால்களுக்கு அஞ்சி ஓடி ஒளியமாட்டேன்!

### ஆதரவாளர்கள் முன் மஹிந்த ஆவேச உரை

•யோ.தர்மராஜ்

போராட்டம், ஆர்ப்பாட்டம் மற்றும் ஹர்த்தால் என்பன எங்களுக்கு அன்றும் இன்றும் புதிதானதல்ல. சவால்களை சந்தித்து, அவற்றை வெற்றிக்கொள்ள முயற்சிப்பதே எனது கொள்கை. மாறாக, சவால்களுக்கு அஞ்சி ஒருபோதும் பயந்தோடியது கிடையாது. 02 பக்கம்

## நாடு முழுவதும் ஊரடங்கு

•யோ.தர்மராஜ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு அலரிமாளிகைக்கு வருகை தந்திருந்த ஆதரவாளர்களால் ஏற்படுத்தப்பட்ட கலவரத்தால் மறு அறிவித்தல் வரை நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 02 பக்கம்

# ஊரடங்கு காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான பயணிகளுக்கு விடுத்துள்ள அறிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஊரடங்கு காலப் பகுதியினுள், விமான நிலையத்திற்கு பிரவேசிக்கும் மற்றும் விமான நிலையத்திலிருந்து வெளியேறும் பயணிகளுக்கான அறிவித்தல் ஒன்றை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விடுத்துள்ளது.

ஊரடங்கு காலப்பகுதியில் விமான நிலையத்துக்கு பயணிப்பவர்கள் தங்களுடைய விமான பயணச்சீட்டுகளை ஊரடங்கு கால அனுமதிப்பத்திரமாக பயன்படுத்தமுடியும் என்றும், விமான நிலையத்திலிருந்து பயணிப்பவர்கள் தமது கடவுச்சீட்டினை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக உபயோகிக்கமுடியும் என்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாடு செல்பவர்கள், விமானம் புறப்படும் நேரத்திற்கு 3 மணிநேரத்துக்கு முன்னதாகவே விமான நிலையத்திற்கு வருகை தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# முப்படையினரின் விடுமுறை இரத்து

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு முப்படையினரினது விடுமுறைகளும் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

நேற்று (09) முதல் உடன் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி, எதிர்காலத்தில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கும் விடுமுறையும் இரத்துசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, விடுமுறையில் உள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடமைக்கு சமுகமளிக்குமாறு பொலிஸ்மா அதிபர் கோரியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு பொதுமக்களின் ஆதரவை பாதுகாப்பு செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரத்தில் பொதுப் பாதுகாப்பிற்காக பொலிஸாருக்கு உதவ முப்படையினரும் அழைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அலரிமாளிகையில் நேற்றிரவு பதற்றம்

**யோ.தர்மராஜ்**

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தங்கியிருந்த அலரிமாளிகை வளவுக்குள் நேற்றிரவு ஆர்ப்பாட்டக்கார்கள் அத்துமீறி நுழைய முயன்றதால் பெரும் களேபரம் ஏற்பட்டது.

இதனால், பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் மீண்டும் மீண்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே நுழைய முயன்றதால் மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டனர்.

ஊரடங்கு சட்டத்தை மீறி பெருமளவில் மக்கள் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் ஆட்டுப்பட்டித்தெருவில் நேற்று இடம்பெற்ற உயிரிழப்பு சம்வம் ஒன்றையடுத்து, நேற்றிரவு அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. அங்கும் மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தூதரகங்கள் கண்டனம்

சமாதானமான முறையில் போராட்டம் நடத்தியோர் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதை அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கண்டித்துள்ளார். அரசாங்கம் இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தோர் தொடர்பில் தனது கவலையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள தனது நாட்டு பிரஜைகளுக்கு பிரித்தானிய தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவத்தின் பின்னர் வேறு பகுதிகளிலும் வன்முறைகள் இடம்பெறலாம் என தூதரகம் தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை பிரித்தானிய தூதரகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேலும், ஜெர்மனி தூதரகமும் இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

## நாடு முழுவதும் ஊரடங்கு...

மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய பதவியை இராஜினாமா செய்யக்கூடாது எனக்கூறி அவரின் ஆதரவாளர்கள் நேற்று (09) அலரிமாளிகைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பின்னர் அவர்கள் அலரிமாளிகைக்கு முன்னாலிருந்து மைனாகோகம மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னாலிருக்கும் கோட்டா கோ கமவிற்குச் சென்று அங்குள்ள கூடாரங்கள் உள்ளிட்ட உடைமைகளை உடைத்து, எரித்தனர்.

இதனையடுத்து, அங்குள்ள போராட்டக்காரர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். இதனால் காலிமுகத்திடலில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், கோட்டாகோகமவிற்கு ஆதரவளித்து பலர் அங்கு படையெடுக்க ஆரம்பித்தனர்.

இதனால், ஆரம்பத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு வடக்கு, மத்தி மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளுக்கு பொலிஸ் ஊடரங்கு சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. பின்னர், நிலைவரம் மோசமடைய ஆரம்பித்ததால் மேல் மாகாணம் முழுவதுக்கும் பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, கொழும்பில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் வீதிக்கு இறங்கியதால் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாடுமுழுவதும் நேற்றிரவு 07 மணிமுதல் இன்று காலை 07 மணிவரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

## கலவரங்களுக்கு மத்தியில் ....

தான் பதவி விலக வேண்டுமா என்பதை மக்கள் கூறவேண்டும் எனக்கூறி நேற்று (09) தன்னுடைய ஆதரவாளர்களை அலரிமாளிகைக்கு அழைத்து தான் பதவி விலக மாட்டேன் என அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, அங்கு வந்த ஆதரவாளர்கள் மைனா கோகம மற்றும் கோட்டா கோகமவிற்குச் சென்று பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர். இதனால், முழு நாட்டிலும் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதற்கிடையிலேயே தான் தன்னுடைய பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்தார். அவருடைய கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதன் பின்னர் முழு அமைச்சரவையும் பதவி விலகியது.

## சவால்களுக்கு அஞ்சி...

என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும், அவர் பதவி விலகக்கூடாது என வலியுறுத்தியும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் , அவர்களின் ஆதரவாளர்களின் பங்கேற்புடன் அலரிமாளிகைக்கு முன்பாக நேற்று (09) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

பின்னர், அலரிமாளிகையின் பிரதான மண்டபத்தில் ஆதரவாளர்களை மஹிந்த சந்தித்ததுடன், அவர்களுக்கு முன்பாக உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நீங்கள் எப்போதும் எங்களுடன் இருந்தீர்கள். இன்று இங்கு வரமுடியாவிட்டாலும் மக்களும் எங்களுடன் இருக்கின்றனர். நாட்டில் ஏற்கனவே இருந்த பொருளாதார நெருக்கடி கொரோனா தொற்றால் உக்கிரமடைந்தது. அது இன்று அரசியல் நெருக்கடியாக உக்கிரமடைந்துள்ளது. 30 மடங்கு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

5 வருடங்களுக்கு செலவழிக்க வேண்டிய செலவுகளை நாங்கள் ஒரே வருடத்தில் செலவழிக்க வேண்டியிருந்தது. சுற்றுலாத்துறை, வெளிநாட்டிலிருந்து வரும் வருமானங்கள் முற்றாக எமக்கு இல்லாதுபோனது. உயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் பலவற்றை நாங்கள் இழக்க வேண்டியிருந்தது. இவ்வாறான நிலையில் எங்களைப் போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வது என்பது பாரிய சவாலாகும். இன்று முழு மக்களும் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

நான் 2009ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தபோது, இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கினேன். எனினும், மக்கள் பாதிக்காத வகையில் அந்த நெருக்கடியை நிவர்த்திசெய்ய முடிந்தது. அப்போது, நாங்கள் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றை எதிர்கொள்வதற்கு அனுபவமுள்ள நிபுணர்களை நியமித்தோம்.

எனவே, பிரச்சினைகள் என்பது தீர்வு இல்லாததல்ல. இந்த நாட்டின் அடிமட்ட அரசியல் செய்துள்ள நான், உங்களுடைய வெற்றி, தோல்வி என்பவற்றை அறிந்துள்ளதுடன், துன்பங்களையும் நன்றாக அறிவேன். போராட்டம், ஆர்ப்பாட்டம் மற்றும் ஹர்த்தால் என்பது எங்களுக்கு அன்றும் இன்றும் புதிதானதல்ல.

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போது, மக்களின் அபிவிருத்தியே முக்கியமானது. மாறாக, கீழ்த்தரமான அரசியல் தேவைகள் எமக்கு தேவையில்லை. மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய சம்பவங்களுக்கு நூல் அறுந்த பட்டம் பறந்ததை பார்த்துக்கொண்டிருப்பதை போல பார்த்துக்கொண்டிருப்பதில் பயனில்லை.

மக்களின் போராட்டங்களை பயன்படுத்தி நாட்டை அராஜகத்திற்கு அழைத்துச் செல்வதற்கான பாதைகளை உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர். எதிர்ப்புகள் வரலாம். அதற்கு தீர்வு வழங்க எங்களிடம் மாற்றுவழிகள் இருக்கவேண்டும். தீர்வு வழங்காது அரசியலமைப்பை மீறுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. எனவே, சவால்களை சந்தித்து, அவற்றை வெற்றிகொள்ள முயற்சிப்பதே எனது கொள்கை. மாறாக சவால்களுக்கு அஞ்சி, ஒருபோதும் பாய்ந்தோடியது கிடையாது.

எதிர்க்கட்சியினர் நாட்டின் மக்கள் பிரச்சினையை மறந்து, தங்களுடைய அரசியல் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முயற்சிப்பது இரசியமில்லை. அவர்களுக்கு அதிகாரமே முக்கியம். ஆனால், மக்களுக்காக நாங்கள் ஒன்றிணைய வேண்டும் என அழைப்புவிடுத்த போது அதனை அவர்கள் நிராகரித்தனர். அதிகாரத்தை எடுப்பதா இல்லையா என இரு மனதில் இருக்கின்றனர். எடுப்பதற்கு ஆசை இருப்பினும் பயம்.

மகாநாயக்க தேரர்கள், கர்தினால், சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பலரால் சர்வக்கட்சி அரசுக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியும் தீர்மானமொன்றுக்கு வரலாம். அழுத்தங்களுக்கு அடிபணியமாட்டேன். ஆனாலும் மக்களுக்கு நன்மை பயக்கும் தீர்வெனில், மக்களுக்காக எந்தவொரு தியாகத்தை செய்வதற்கும் நான் தயாராக இருக்கின்றேன்.

69 இலட்சம் பேர் வழங்கிய ஆணையையும் அவர்களின் அபிலாஷைகளையும் காட்டிக் கொடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. 2015ஆம் ஆண்டு தோல்வியடைந்த போதிலும் மக்களின் நம்பிக்கையால் மீண்டும் அரசியலுக்கு வந்தேன். மக்களின் குரல்களுக்கு என்ற வகையில் தற்போது நான் என்ன செய்யவேண்டும் என்பதை நீங்கள் கூறுங்கள். நான் பதவி விலக வேண்டியதில்லை. நான் எப்போதும் மக்கள் பக்கமே இருந்தேன்.

இந்த மே மாதம் வெற்றியை பெற்ற நாள். உங்களுடன் இணைந்தே நான் முடிவுகளை எடுப்பேன். எனக்கு முதலாவதும் தாய் நாடு, இரண்டாவதும் தாய் நாடு, மூன்றாவம் தாய்நாடு – என்றார்.

## நாட்டில் தீயாக பரவிய...

மற்றும் கோட்டா கோ கமவிற்குச் சென்று போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதையடுத்தே நாடு பூராகவும் கலவரங்கள் வெடித்தன.

இதனையடுத்து, கொழும்புக்கு வந்து மீண்டும் தங்களுடைய மாவட்டங்களுக்குச் சென்ற மஹிந்தவின் ஆதரவாளர்களின் பஸ்கள் மருதானை, மாளிகாவத்தை, ஹோமாகம, காலி வீதி, நவலோக்க, திம்பிரிகஸ்யாய உள்ளிட்ட பல பகுதிகளில் வைத்து அடித்து நொறுக்கப்பட்டதுடன், சில பஸ்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

### வாவியில் தத்தளித்த ஆதரவாளர்கள்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகக்கூடாது எனக் கோரி ஆதரவளித்து, காலிமுகத்திடலில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றவர்களை மடக்கிப்பிடித்த மக்கள், அடித்து அவர்களை கொம்பனித்தெரு பேர வாவியில் தள்ளி விட்டனர்.

நேற்று (09) காலை கொழும்பு அலரிமாளிகைக்கு வருகைத் தந்த மஹிந்தவின் ஆதரவாளர்கள், கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கமவிலுள்ள போராட்டக்காரர்களை தாக்கி காயப்படுத்தினர். இதனையடுத்து, அவர்கள் அங்கிருந்து தப்பித்து பேர வாவியின் வழியாகச் செல்ல முற்பட்டபோது, அங்கிருந்து மக்கள் அவர்களை மடக்கிப்பிடித்து, அடித்து பேர வாவியில் தள்ளிவிட்டனர்.

ஆண்கள், பெண்கள் எனப் பாராது மஹிந்தவிற்கு ஆதரவளிக்க வந்து, சாதாரண மக்களை தாக்கியதால் கோபமடைந்த மக்கள் அவர்களை இவ்வாறு வாவியில் தள்ளிவிட்டனர்.

இதனால், அந்த ஆதரவாளர்கள் அங்கிருந்து எங்குச்செல்ல முடியாது நீரில் தத்தளித்துக் கொண்டிருந்ததுடன், அதிலிருந்து ஒருவர் இப்போது அப்பாச்சியை வரச் சொல்லுங்கள் எங்களை காப்பாற்ற எனக் கூறினார்.

### பஸ்கள் உடைத்து தீ வைப்பு

கொழும்புக்கு வந்த ஆதரவாளர்களின் பஸ்களை தேடி பல இடங்களில் சோதனை வேட்டைகள் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக, கொழும்புக்கு வந்த பஸ்கள் மற்றும் வாகனங்களில் இலக்கங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இதனையடுத்து, பல பகுதிகளிலும் பஸ்கள் சோதனை செய்யப்பட்டன.

இதன்போது, ஆதரவாளர்கள் வந்து பஸ்கள் நிறுத்தப்பட்டு, உடைக்கப்பட்டன. அதன்படி, கொழும்பு, தும்புள்ள, மஹரகம, வத்தளை போன்ற பகுதிகளில் பஸ்கள் உடைத்து, பாதையில் கவிழ்க்கப்பட்டது. இதேவேளை, மாளிகாவத்தை, நவலோக்க போன்ற பகுதிகளில் பஸ்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னான்டோவின் அதி சொகுசு வாகனம் உடைத்து பேர வாவியில் தள்ளப்பட்டதுடன், மேலும் சில சொகுசு கார்களும் வாவிக்குள் தள்ளப்பட்டன. மேலும், ஆதரவாளர்கள் வந்த இரண்டுக்கும் மேற்பட்ட பஸ்களும் வாவிக்குள் தள்ளப்பட்டன.

### கொழும்புக்கு வெளியே வெடித்த போராட்டம்

கொழும்பில் இடம்பெற்ற குழப்பத்தை கண்டித்து நாடு முழுவதும் மக்கள் வீதிக்கு இறங்கினர். இதனையடுத்து, பல பகுதிகளில் அது கலவரமாக மாறியது. பல பகுதிகளில் ஆதரவாளர்கள் மற்றும் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடுகளும் ஏற்பட்டன.

பல பகுதியில் மக்கள் வீதியில் தொடர்ந்து போராடி வந்ததுடன், அங்கிருந்து அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் அலுவலகங்களும் உடைத்து நொறுக்கப்பட்டன. இவற்றை பொலிஸாரினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முடியாத நிலைமை காணப்பட்டன.

ஊரடங்கு சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதனை கவனத்தில் கொள்ளாது, நாடு முழுவதும் வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை சில இடங்களில் கலவரமாக மாறியது.

### எம்.பிக்களின் வீடுகள், அலுவலகங்கள் சேதம்

கொழும்பில் போராட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டின் பல பகுதிகளில் மக்கள் கோபமடைந்து வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்தியதுடன், தங்களுடைய பகுதியிலிருந்த அரசியல்வாதிகளின் வீடுகள், வாகனங்கள், அலுவலகங்கள் உடைத்து நொறுக்கப்பட்டதுடன், தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அதன்படி, முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரண, நிமல் லான்சா, திஸ்ஸகுட்டியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் சனத் நிஷாந்த, சாந்த பண்டார, அலி சப்ரி ரஹீம் ஆகியோரின் வீடுகள் முற்றாக தீயிட்டு கொளுத்தப்பட்டன. மேலும் சிலரின் அலுவலகங்களும் உடைத்து நொறுக்கி, தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அதேபோன்று, மீரிகம நகர சபையின் தலைவரின் வீடு தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன், குருநாகல், மொரட்டுவ, பண்டாரவளை நகர சபைகளின் தலைவர்களது வீடுகளும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

### விரட்டியடிக்கப்பட்ட ஆதரவாளர்கள்

கொழும்பில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களை மடக்கிப்பிடித்த மக்கள் வீதியில் வைத்து அடித்து, கம்பங்களில் கட்டிவைத்தனர்.

சில முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களின் ஆடைகளை உருவி, வீதியில் அடித்து விரட்டியதையும் காணமுடிந்தது.

## அரச ஆதரவுடன்...

அங்கு பொலிஸார் திரண்டு நிலைமையை சமாளிக்க முயன்றபோதும், வன்முறையாளர்கள் அதிகளவு திரண்டதால் நிலைமை மோசமானது. இதில் பலர் காயமடைந்தனர். அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லக் கூட வழியில்லாத நிலைமை ஏற்பட்டது.

### காலிமுகத்திடல் நோக்கிய ஊர்வலம்

அலரி மாளிகை முன்பாக வன்முறையில் ஈடுபட்ட அரச ஆதரவாளர்கள் அங்கிருந்து ஊர்வலமாக காலிமுகத்திடல் நோக்கிப் புறப்பட்டனர்.

காலிமுகத்திடலுக்கு சென்றோரை பொலிஸார், கோல்பேஸ் ஹோட்டலுக்கு அருகில் மறித்தபோதும் அவர்கள் பொலிஸாரின் கருத்துகளை செவிமடுக்காமல் நேரடியாகவே காலிமுகத்திடலுக்கு அருகில் செல்ல முயற்சிகளை எடுத்தனர். அரச ஆதரவாளர்களை தடுத்து நிறுத்த அப்போது பொலிஸார் எந்த முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை.

இதனையடுத்து பொலிஸாரை மீறிக்கொண்டு காலிமுகத்திடல் மைதானம் வழியாக கோட்டா கோகாம பகுதிக்கு சென்ற குண்டர்கள், அங்கு போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், கூடாரங்களையும் அடித்து நொறுக்கி எரித்தனர்.

அங்குச் சென்ற குண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இவர்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் குண்டர்களின் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு முன்பாகவே போராட்டக்கார்கள் நடுவீதியில் வைத்து தாக்குதல் நடத்தினர்.

இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், அமைதியான போராட்ட களமாக இருந்த காலிமுகத்திடல் கலவர பூமியாக மாறியது.

### பொலிஸார் தண்ணீர்தாரை தாக்குதல்

அலரிமாளிகையிலிருந்து கோட்டா கோ கமவிற்கு சென்ற குண்டர்களை தடுப்பதற்காக பொலிஸ் பாதுகாப்பும் தண்ணீர்த்தாரை வண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், பொலிஸாரையும் தண்ணீர்த் தாரை வண்டிகளையும் மீறி கோட்டா கோ கமவிற்குள் நுழைந்தனர்.

அதுவரை தண்ணீர்த் தாரை பிரயோகம் முன்னெக்கப்படவில்லை. இதனையடுத்து, போராட்டக்கார்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியதால், அவர்களை கலைப்பதற்கு பொலிஸார் முதலில் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர். இருந்தும் அவர்கள் அங்கும் இங்கும் ஓடி அங்கிருந்தவர்களை தொடர்ந்தும் தாக்கினர். இதனையடுத்து, கண்ணீர்ப்புகைத் தாக்குதலையும் முன்னெடுத்தனர்.

ஆனாலும், அங்கிருந்த குண்டர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து, தொடர்ந்து கண்ணீர்ப்புகைத் தாக்குல் நடத்தப்பட்டதால் அலரிமாளிகை பக்கம் சென்றனர்.

### களத்துக்கு வந்த போராட்டக்காரர்கள்

காலிமுகத்திடலில் இருந்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, அவர்களுக்கு ஆதரவாகவும் குண்டர்களை அடித்துவிரட்டவும் ஒன்றிணைந்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், மதத்தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து, அங்கிருந்து குண்டர்கள் விரட்டியடிக்கப்பட்டதுடன், போராட்டக்காரர்களும் தங்களின் பாதுகாப்புக்காக ஆயும் ஏந்த ஆரம்பித்தனர்.

காலையில் குறைந்த போராட்டக்காரர்களுடன் அமைதியான முறையில் காணப்பட்ட போராட்ட பூமி, குண்டர்களின் அட்டகாசத்தால் மீண்டும் ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றிணைத்த பெரும் போராட்டக்களமாக மாறியது.

### களத்துக்கு வந்த சட்டத்தரணிகள்

போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதையடுத்து, அவர்களை பாதுகாப்பதற்காக சம்பவ இடத்திற்கு சட்டத்தரணிகள் விரைந்து வந்தனர். இவர்கள் தங்களின் உயிரைப் பற்றி கவலைப்படாது, போராட்டக்காரர்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு கேடயமாக மாறியதுடன், போராட்டக்காரர்களை வன்முறையில் ஈடுபடாதவாறும் பாதுகாத்தனர்.

இங்கு வந்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் அசமந்தத்தால் போராட்டக்காரர்கள் கடுமையாக தாக்கப்பட்டதாகவும், உரிய நேரத்திற்கு உரிய நடவடிக்கையை எடுக்கத் தவறியதாகவும் குற்றம் சுமத்தினர். எனினும், போராட்டக்காரர்கள் குண்டர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பெரும் முயற்சிகளை முன்னெடுத்த போதிலும், அவர்களை வன்முறையில் ஈடுபடாதவாறும், குண்டர்கள் மீண்டும் அவ்விடத்திற்கு வராத வகையில் அனைவரும் கைகளைக் கோர்த்து பாதுகாப்பு சங்கிலியாக செயற்பட்டனர்.

### குவிக்கப்பட்ட இராணுவம்

காலிமுகத்திடல் பெரும் கலவர பூமியாக மாறியதையடுத்தும் அங்குள்ள மக்களை பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாதமையினாலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். எனினும், இராணுவத்தினரை கோட்டா கோ கமவிற்கு அருகில் நிற்க வேண்டாம் என போராட்டக்காரர்கள் கடும் அழுத்தம் கொடுத்தனர்.

இதனையடுத்து, அவர்கள் அலரிமாளிகை பக்கமாக தங்களுடைய பாதுகாப்புகளை பலப்படுத்தியதுடன், பொலிஸாரின் ஆதரவுக்காகவே இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### சஜித், அநுர வருகை

காலிமுகத்திடலில் போராடிக்கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியதையடுத்து, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவும் களத்துக்கு வந்தனர்.

இதன்போது, களத்திற்கு வந்த சஜித் பிரேமதாசவை அங்கிருந்த குண்டர்கள் தாக்க ஆரம்பித்தனர். இதனையடுத்து, அவர்களின் பாதுகாப்புப் பிரிவினர் அவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெரான் விக்ரமரத்னவையும் பாதுகாப்பாக வாகனத்தில் ஏற்றி அனுப்பிவைத்தனர்.

### களத்துக்கு வந்த கார்தினால்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் கோட்டா கோகமவிலுள்ள போராட்டக்கார்கள் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து, கர்தினால் மெல்கம் ரஞ்சித் மற்றும் ஓமல்பே சோபித்த தேரர் ஆகியோரும் களத்துக்கு வருகைத் தந்தனர்.

அங்கு வந்த கார்தினால் தாக்குதலுக்கு தன்னுடைய எதிர்ப்பை வெளியிட்டதுடன், போராட்டக்காரர்களின் போராட்டத்தை வரவேற்பதாகவும் கூறினார்.

### பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

மஹிந்தவிற்கு ஆதரவளிப்பதாகக் கூறி கொழும்பு வந்த குண்டர்கள் மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கமவிற்குச் சென்று அங்கு கலவரத்தை ஏற்படுத்தியதையடுத்து, நிலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், தாக்கப்பட்ட போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக ஆயிரம் கணக்கானவர்கள் அங்கு வந்ததால் குண்டர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, பொலிஸ் மற்றும் இராணுவத்தைக் கொண்டு அப்பகுதியின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டதுடன், அப்பகுதியின் அனைத்து நுழைவாயிலிலும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். எனினும், அப்பகுதியில் மாலை வேளையில் அதிகமான போராட்டக்காரர்கள் வருகைத் தந்தனர்.

# கொழும்பில் நேற்று இடம்பெற்ற வன்முறை




















படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே, கிரிஷான் காரியவசம், ஏஷான் தசநாயக்க, சமன் அபேசிறிவர்தன

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரும் நாட்டு மக்களின் எதிர்ப்புக்கோஷம் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

பொதுமக்கள் ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் ஒரு மாதத்தை எட்டியிருக்கிறது. தமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை அங்கிருந்து அகன்று செல்லப் போவதில்லையென ஆர்ப்பாட்டக்காரர்கள் விடாப்பிடியாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

யுத்தத்தை வெற்றிகொண்ட நாயகன் என சிங்கள மக்களால் போற்றப்படும் மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாக எதிர்க்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மத வழிபாடுகளுக்காக நேற்று முன்தினம் அநுராதபுரத்திலுள்ள ஜயஸ்ரீ மகாபோதி விகாரை, ருவன்வெலிசாய விகாரை ஆகியவற்றுக்குச் சென்றிருந்தார். இவ்விரு வழிபாட்டிடங்களிலும் அவருக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

"பிரதமரே, இன்று (நேற்று) நற்செய்தியை எதிர்பார்த்துள்ளோம். இதுவரை செய்தது போதும். பதவி விலகுங்கள்" என மக்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன், இவ்விரு வழிபாடுகளையும் நிறைவுசெய்துகொண்டு மிரிசவெட்டியவுக்கு சென்றபோது அங்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அதிக மக்கள் செல்வாக்குடன் ஐந்து தசாப்த அரசியல் முதிர்ச்சிகொண்ட பிரதமருக்கு இவ்வாறு எதிர்ப்பு வெளியிடப்படும் என அவர் நினைத்திருக்க மாட்டார். ஆனால், நாட்டு மக்கள் அவ்வாறான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக கொழும்பில் கடந்த மூன்று நாட்களாக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். கோபம் தாளாது வீதிகளை மறித்து நீண்ட நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வீதிகளில் பயணிப்போருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் பெரும் முறுகல்நிலை ஏற்பட்டதுடன், கடும் வாகனநெரிசலும் ஏற்பட்டது.

ஆமர் வீதியில் எரிவாயுவுக்காக காத்திருந்த மக்கள் அதனை ஏற்றிவந்த

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மே 10ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நியாயமான மக்கள் ஆவேசம்!

லொறியை இடைநிறுத்தி அதிலிருந்த சிலிண்டர்களை பலவந்தமாக எடுத்துச் சென்றார்கள்.

உண்மையில் இவ்வாறான சம்பவங்கள் மக்களின் விரக்தி நிலையை எடுத்துக்காட்டுகிறது. இந்தச் சம்பவம் எதிர்காலத்தில் நிகழப்போகும் சம்பவங்களையே சுட்டி நிற்கின்றது. இதனை சாதாரண எதிர்ப்பாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

நகரப் பகுதிகளில் விறகடுப்பில் சமைக்க முடியாத நிலையில், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நீண்ட வரிசைகளில் பொதுமக்கள் காத்திருக்கிறார்கள். எரிவாயு விலை அதிகரிப்பினால் மண்ணெண்ணெய் அடுப்புகளை வாங்கிய மக்களுக்கு மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளவும் வழியில்லை.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த மக்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகவும், வயிற்றுப் பசியைப் போக்குவதற்காகவும் இவ்வாறு செயற்படுவதைத் தவறு எனச் சொல்ல முடியாது. ஏனென்றால், அந்தளவுக்கு அவர்கள் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

அரசத் தலைவருக்கு கண்ணீருடன் மக்கள் சாபம் விடுகிறார்கள். கொள்ளையடித்த பணத்தை மீளத் தருமாறு கோரி ஆவேசமாக தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

ஆங்காங்கே கிடைக்கப்பெறும் எரிவாயு சிலிண்டர்கள் ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் ரூபா வரை கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றன. இவற்றை நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லை மீறிய விலையேற்றத்தினாலும், பொருள் தட்டுப்பாடு காரணமாகவும் மக்கள் விரக்தியில் இருக்கிறார்கள். அவர்கள் அதனை வெளிப்படுத்துவதற்காக வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். நியாயமான போராட்டங்களைக் கட்டுப்படுத்த முயல்வது அரசாங்கத்தின் இயலாமையை வெளிக்காட்டுகிறது.

முதலில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் மிக அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைவிடுத்து அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சூட்சுமமான வழிகளைத் தேடுவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து பொதுமக்கள் வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்களித்த மக்களே அவரை வெளியேறுமாறு வலியுறுத்துகிறார்கள். மக்களின் ஆணைப்படியே ஜனாதிபதியாக தொடர்ந்தும் பதவி வகிப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ கூறினாலும், தற்போது மக்களின் எதிர்ப்புக் குரலையும் செவிமடுக்க வேண்டும். இல்லாவிடின் நியாயமான மக்களின் ஆவேசத்தைத் தவிர்க்க முடியாது.

இதேவேளை, காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியோர்மீது மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலின்பின் நேற்று நாடுமுழுவதும் வெடித்துள்ள போராட்டங்கள் மேற்சொன்ன விடயத்துக்கு கட்டியம் கூறிநிற்கின்றன.

# மார்பகப் புற்றுநோய் ஏன் எலும்பில் பரவுகிறது?

பேராசிரியர் சோ.மோகனா

மார்பகப் புற்றுநோய் மெட்டாஸ்டாஸிஸ்(metastasis) நிலையில் ஏன் எலும்பில் பரவுகிறது என்பது தொடர்பான ஒரு புதிய கண்டுபிடிப்பு, ஜெனீவா பல்கலைக்கழக ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டு இது குறித்த தகவல்கள் ஏப்ரல் 21, 2022 அன்று அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**புற்றுநோய் செல்களின் தன்மை**

புற்றுநோய் செல்கள் ஒரு முதன்மைக் கட்டியிலிருந்து பிரிந்து மற்ற உறுப்புகளுக்கு இடம்பெயரும்போது, இது மெட்டாஸ்டேடிக் புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த மெட்டாஸ்டாஸிஸ்களால் பாதிக்கப்பட்ட உறுப்புகளின் நிலை, விஷயத்தில், மெட்டாஸ்டேடிக் புற்றுநோய் செல்கள் முதன்மையாக, முக்கியமாக எலும்புகளைத் தாக்கி காலனித்துவப்படுத்துகின்றன. ஆனால், இந்த மெட்டாஸ்டேடிக் புற்றுநோய் செல்கள் கல்லீரல், நுரையீரல் அல்லது மூளை போன்ற பிற உறுப்புகளிலும் காணப்படலாம்.

**டியூமர் (Tumour) உயிரணுக்களின் நெகிழ்வுத்தன்மை**

மெட்டாஸ்டேடிக் செல்களின் செயல்முறையின் வெவ்வேறு நிலைகளுக்குக் காரணமான மூலக்கூறு மற்றும் செல்லின் இயக்க வழிமுறைகள் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. இருப்பினும் அங்குள்ள செல்களின் நெகிழ்வுத்தன்மைதான் இதற்கு முக்கிய காரணகர்த்தா என்பதும் எலும்புக்குப் பரவாமல், நுரையீரலில் மெட்டாஸ்டாஸிஸை உருவாக்குகின்றன. எலும்புகளில் அல்ல என்கிறார் மூலக்கூறு மற்றும் உயிரணு உயிரியல் துறையின் ஆராய்ச்சியாளரும் ஆய்வின் முதல் ஆசிரியருமான நஸ்டரன் முகமதி கஹாரி.

எலும்புத் திசுக்களில் மெட்டாஸ்டாஸிஸைத் தூண்டும் திறன் கொண்ட காரணிகளை நாங்கள் அடையாளம் காண முயன்றோம், குறிப்பாக ZEB1 காரணியின் விளைவை சோதித்தோம் என்று நஸ்டரன் முகமதி கஹாரி தெளிவாகத் தெரிவிக்கிறார். ZEB1 காரணிதான் எலும்புக்கு செல்ல மெட்டாஸ்டாஸிஸை இயக்குகிறது என்று சொல்கிறார்.



அவற்றின் தோற்றத்தின் திசுக்களின் தன்மையைப் பொறுத்தது. மார்பகப் புற்றுநோயில், மெட்டாஸ்டேடிக் புற்றுநோய் செல்கள் என்பவை பொதுவாக எலும்புகளில் உருவாகின்றன. இதனை புற்றுநோய் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பரவுகிறது என்று கூறுகிறோம்.

**புரதம் கண்டுபிடிப்பு**

புற்றுநோய் செல்கள் நகர்வைப் பொறுத்தவரை மெட்டாஸ்டாஸிஸ் நிலையில் பாதிக்கப்பட்ட உறுப்புகளை எது தீர்மானிக்கிறது என்பதை ஆய்வு செய்யும் முயற்சியில், ஜெனீவா பல்கலைக்கழகத்தின் குழு, சூரிச்சின் (ETH Zurich) ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து ஈடுபட்டது.

இந்த ஆய்வுக் குழுவானது, மெட்டாஸ்டாஸிஸ் நிலையில் இந்த நிகழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு புரதத்தை அடையாளம் கண்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பு என்பது மெட்டாஸ்டாஸிஸ் நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை அணுகுமுறைகளின் வளர்ச்சிக்கு நிச்சயமாக வழிவகுக்கும். இது தொடர்பான செய்திகள் நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் (Nature Communications) இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

**மெட்டாஸ்டேடிக் புற்றுநோய் செல்கள் நகர்தல்**

புற்றுநோய்க்கட்டி என்பது அது உருவான முதன்மை இடத்திலிருந்து, அதன் புற்றுநோய் செல்கள் அவற்றின் நுண்ணிய சூழலை ஆக்கிரமித்து, பின்னர் இரத்தம் மற்றும் நிணநீர் நாளங்கள் வழியாக உடலின் மற்ற தொலைதூர ஆரோக்கியமான திசுக்களுக்குப் பரவி மெட்டாஸ்டாஸிஸ் செல்களை உருவாக்கலாம். மார்பகப் புற்றுநோயின் இப்போதுள்ள செய்துள்ள ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்த செயற்பாடு என்பதும்கூட அந்த செல்களின் செயற்பாடு மற்றும் வடிவத்தை மாற்றும் செல்களின் திறனைக் குறிக்கிறது. இதனால், மெட்டாஸ்டேடிக்காக மாறும் டியூமர் கட்டி செல்கள் அவற்றின் வடிவத்தை மாற்றி நகர்ந்து செல்லும் செல்களாகவும் மாறக்கூடும்.

**மெட்டாஸ்டேடிக் செல்களை கட்டுப்படுத்தும் ZEB1 புரதம்**

அறிவியல் துறையின் மூலக்கூறு மற்றும் உயிரணு உயிரியல் துறையின் பேராசிரியர் டிடியர் பிகார்டின் (Didier Picard) ஆய்வகத்தில் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விடயத்தில், மெட்டாஸ்டேடிக் செல்களின் செயல்முறைகளை எது நிர்வகிக்கிறது என்பதை அறிய மிகவும் ஆர்வமாக ஈடுபட்டனர். அவரது குழு, பேராசிரியர் நிக்கோலஸ் அசெட்டோவின்(Nicolas Aceto) குழுவுடன் இணைந்து எலிகளில் இந்த மார்பகப் புற்றுநோய் பற்றிய செயல்முறைகளை ஆய்வு செய்தது. உயிரியலாளர்கள் மார்பகப் புற்றுநோய் உயிரணு, மெட்டாஸ்டேடிக் உயிரணுவாக இடம் பெயர்ந்ததில், அவர்கள் உயிரணுவின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்க அல்லது தூண்டிவிட எந்தப் பொருள் உதவுகிறது என்று ஆய்வு செய்து அறிந்தனர். அப்படி அறியப்பட்ட பொருள் என்பது ZEB1 என்ற புரதத்தின் சாத்தியமான பங்குதான் என்பதை ஆய்ந்தறிந்தனர்.

**எலிகளில் நிலைமை வேறு**

மனித மார்பகப் புற்றுநோய் உயிரணுக்களுடன் இடமாற்றம் செய்யப்பட்ட எலிகள், மனிதப் பெண்களின் புற்றுநோய் செல்கள்போன்று

**சோதனை மூலம் தெளிவு**

புற்றுநோய் செல்களின் இடம்பெயர்வு மற்றும் ஊடுருவல் சோதனைகளில், விஞ்ஞானிகள், ZEB1 -யை வெளிப்படுத்தும் புற்றுநோய் செல்கள் அதை வெளிப்படுத்தாத புற்றுநோய் செல்கள் போலல்லாமல் எலும்புத் திசுக்களுக்கு நகர்வதைக் கண்டறிந்தனர். மனித மார்பகப் புற்றுநோய் செல்கள் எலிகளின் பாலூட்டி சுரப்பிகளில் இடமாற்றம் செய்யப்பட்டபோது இந்த முடிவுகள் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டன. புற்றுநோய் செல்கள் ZEB1 -யை வெளிப்படுத்தவில்லை என்றால், மெட்டாஸ்டாஸிஸ் நிலை முதன்மையாக நுரையீரலில் ஏற்பட்டது. இதற்கு நேர்மாறாக, ZEB1 இருந்தபோது, பெண்களைப் போலவே எலும்புகளிலும் மெட்டாஸ்டேஸிஸ் செல்கள் உருவாகின.

**புற்றுநோயைக் கட்டுப்படுத்த புதிய அணுகுமுறை?**

எனவே, இந்த காரணி என்பது ட்யூமர் கட்டி உருவாக்கத்தின்போது வெளிப்படுத்தப்படுகிறது, இது எலும்புகளுக்கு மெட்டாஸ்டேடிக் பண்புகளைப் பெற்ற செல்களை வழிநடத்துகிறது என்று கருதலாம் என ஆய்வின் ஆசிரியரான டிடியர் பிகார்ட் கூறுகிறார். இந்த ஆய்வு மெட்டாஸ்டேடிக் செல்கள் செயற்பாட்டின்போது டியூமர் கட்டி உயிரணுக்களின் நெகிழ்வுத்தன்மையை, அதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. எனவே, இப்படி இந்தக் காரணிகள் உருவாகாமல் இருக்க மற்றும் நீண்ட காலத்திற்கு, மெட்டாஸ்டேஸ்கள் தோன்றுவதைத் தடுக்க புதிய சிகிச்சை அணுகுமுறைகளைக் கையாள இந்த ஆய்வு மிகவும் பயனுள்ளதாகும்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1612 – ஷாஜஹான் மும்தாஜ் மகாலைத் திருமணம் புரிந்தார்.
- 1773 – வட அமெரிக்க தேயிலை வணிகத்தில் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்திற்கு ஏகபோக உரிமை அளிக்கும் தேயிலை சட்டத்தை பெரிய பிரித்தானியாவின் நாடாளுமன்றம் அமுல்படுத்தியது.
- 1824 – லண்டன் தேசிய அருங்காட்சியகம் பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது.
- 1908 – அன்னையர் தினம் முதன்முதலில் அமெரிக்காவில் மேற்கு வேர்ஜினியாவில் கொண்டாடப்பட்டது.
- 1940 – நெவில் சேம்பர்லேன் பதவி துறந்ததையடுத்து, வின்ஸ்டன் சர்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.
- 1946 – ஜவஹர்லால் நேரு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரானார்.
- 1946 – அமெரிக்கா முதல் தடவையாக வி-2 ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியது.
- 1960 – அமெரிக்காவின் டிரைட்டன் புவியை கடலடியாக சுற்றி வந்த முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் என்ற சாதனையைப் படைத்தது.
- 1975 – சோனி நிறுவனம் பீட்டாமாக்ஸ் என்ற காணொளி நாடாப் பதிப்பை ஜப்பானில் வெளியிட்டது.
- 1979 – மைக்குரேனேசிய கூட்டாட்சி நாடுகள் சுயாட்சி பெற்றன.
- 1994 – நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்





காலிமுகத்திடல்













புத்தளம்



கொழும்பு தேசிய வைத்தியசாலை







கொட்டகலை





கம்பளை









நுவரெலியா





படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே, கிரிஷான் காரியவசம், ஏஷான் தசநாயக்க, சமன் அபேசிறிவர்தன, ராஸின் ரஸ்மின், என்.பிரசாந்த், எஸ்.திவாகரன், பி.கேதீஷ்

# அரசுடன் தொடர்புகொண்ட வெறிபிடித்த நபர்களால் தீவிரவாதத் தாக்குதல்; காலிமுகத்திடல் சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசம்

## ராஜபக்ஷக்கள் பதில் கூறவேண்டும் எனவும் தெரிவிப்பு



அலரி மாளிகையின் முன்னால் மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஜனநாயகத்தை மற்றும் சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதை தமது பிரார்த்தனையாக கொண்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அரசுடன் தொடர்புடைய வெறிபிடித்த தீவிரவாத கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான வன்முறைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு உரிய கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு மாத காலத்திற்கு மேலாக அகிம்சை வழியில் மிகக் கண்ணியமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை மீறும் வகையில் அல்லது பண்பாடற்ற முறையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் பதியப்படவில்லை என்பதோடு, அவர்கள் வன்முறைக்குப் பதிலாக அகிம்சையே கை கொண்டார்கள்.

அவ்வாறான அகிம்சைவாத போராளிகள் மீது அரசானது எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது தீவிரவாத பாணியிலான அடக்குமுறையையும், அச்சுறுத்தல்களையுமே மேற்கொண்டு வந்தது.

தன்னுடைய ஆதரவாளர்கள் மற்றும் அதிகார பலத்தால் வெறிகொண்டுள்ள கூட்டம் ஆட்சி செய்கின்றது. அழுக்குப்படிந்து துர்நாற்றம் வீசக்கூடிய அரசை நாம் எச்சரிக்கின்றோம். இந்த மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ராஜபக்ஷ உள்ளடங்கலாக அனைவரும் தொடர்புபடுகின்றனர். இந்தத் தீவிரவாத பாணியிலான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார்.

# காலிமுகத்திடல் வன்முறையின் பின்னர் மக்கள் எதிர்ப்பு



மஹரகம





ரமேஷ் பத்திரனவின் வீடு





ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அலுவலகம்



மொரட்டுவ நகர சபைத் தலைவர் சமன்லால் பெர்னாண்டோவின் வீடு





தாக்குதல் நடத்தியோர்







கங்காராம வாவி





சனத் நிசாந்த வீடு

# காலிமுகத்திடல் சம்பவத்துக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம்

## மைத்ரிபால சிறிசேன



அரசாங்கம் சர்வதேச ரீதியில் கடும் மனிதாபிமான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் திட்டமிட்டு போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. காலிமுகத்திடலுக்கு தடிகளுடன் குண்டர்கள் அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள். இது திட்டமிடப்பட்ட குற்றச் செயலாகும். ராஜபக்ஷவினர் இதற்கான பிரதிபலனை அனுபவிப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## ரணில் விக்ரமசிங்க



அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்த கோட்டா கோ கமவில் உள்ளவர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனை தாம் வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

"இளைஞர்கள், ஜனநாயக முறையில் தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்தார்கள். அதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவர்களுக்கு உரிய வகையில் பதிலளிக்கவில்லை. அந்த தவறை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று நாட்டில் சமாதானம், நீதி இல்லை. மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமல்லாது கோட்டாபய தலைமையிலான ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## எம்.ஏ.சுமந்திரன்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார். காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டமை தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மஹிந்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட வேண்டும். அத்துடன், தாக்குதல்தாரர்களை கொழும்புக்கு அழைத்துவந்த அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

## மனோ கணேசன்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான அரச பயங்கரவாதிகளால் நேற்று காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகின் மிக அமைதியான 31ஆம் நாள் கொழும்பு காலிமுகத்திடல் போராட்டம், பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லமான அலரி மாளிகையிலிருந்து கிளம்பிவந்த அரச பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டது. இலங்கையர்களின் கோ ஹோம் கோட்டா மற்றும் கோ ஹோம் ராஜபக்ஷ என்ற கோஷங்கள் இனி சர்வதேச சமூகத்தின் கோஷமாகவும் மாறவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## ரவூப் ஹக்கீம்



யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க முடியாத தொரு வங்குரோத்து சர்வாதிகாரம், அலரி மாளிகையையும் காலிமுகத்திடலையும் சூழ அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவந்தவர்கள் மீது அப்பட்டமான வன்செயலாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. கோட்டாவும், மஹிந்தவும் கேவலப்பட்டு வெளியேறுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. பொதுஜன முன்னணியினரின் இந்த எல்லை மீறிய செயல் அவர்களின் கடைசிக் கோரத்தாண்டவமாகும்.

நேற்று (09) தாக்குதல் சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மேற்கண்டவாறு பலத்த கண்டனத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

## நாமல் ராஜபக்ஷ



நாட்டு மக்கள் அமைதியைப் பேண வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை வன்முறைகள் மேலும் மோசமடையைச் செய்யும். ஆதலால் வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சரத் பொன்சேகா



அமைதியான முறையில் அரசுக்கு எதிராக போராட்டம் மேற்கொண்டவர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டமை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு செய்துள்ள தேசத் துரோகமாகும் -என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட முப்படையினர் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். பொலிஸ் மா அதிபர் எதிர்க்கட்சித் தலைவரது தொலைபேசி அழைப்புக்குக்கூட பதிலளிக்கவில்லை. இந்த வன்முறைகளுக்கு காரணமான அனைவரும் பதவி விலக வேண்டும்" - என்றார்.

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி.



ராஜபக்ஷக்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எந்த எல்லைக்கும் செல்வார்கள், ராஜபக்ஷக்களின் குண்டர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் இலங்கை ஜனநாயகத்தில் விழுந்த கரும்புள்ளி - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்

நாட்டில் இன்று எரிபொருள், கேஸ், மருந்துப்பொருட்கள், பால்மா என ஒன்றுமே இல்லை. இந்த குறைபாடுகளை நிவர்த்திசெய்வதே ஆட்சியாளர்களின் கடமை. ஆனால், ராஜபக்ஷக்கள் தமது அதிகாரத்தை எவ்வாறு தக்கவைக்கலாம் என்றே சிந்திக்கின்றனர்.

இன்று ராஜபக்ஷக்களின் குண்டர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் இலங்கை ஜனநாயகத்தில் விழுந்த கரும்புள்ளி என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான், இவ்வாறான தாக்குதல்கள் இலங்கையை மீண்டும் ஜூலை கலவரத்துக்கு கொண்டு செல்லும்.

ஆகவே, எமது நாட்டை பொருளாதாரத்திலும் அரசியல் ரீதியிலும் படுகுழியில் தள்ளியுள்ள ராஜபக்ஷக்களை நாம் விரட்டும்வரை எமது போராட்டம் தொடர வேண்டும் - என மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை சிறையிலுள்ள இராமேஸ்வர மீனவர்களை விடுதலை செய்யக்கோரி தங்கச்சிமடத்தில் ஆர்ப்பாட்டம்





(மன்னார் நகர் நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 12 மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 4 மீனவர்களை உடனடியாக தாயகம் அழைத்து வர நடவடிக்கை எடுக்கக் கோரியும் தங்கச்சிமடத்தில் மீனவர்கள் நேற்று (09) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறையிலுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 12 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தியும், கடந்த 2019ஆம் ஆண்டுமுதல் 2022ஆம் ஆண்டுவரை இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கை வசமுள்ள விசைப்படகுகளை மீட்டுத்தரக் கோரியும், விடுதலை செய்யப்பட்டு நாடு திரும்பாத மண்டபத்தைச் சேர்ந்த 4 மீனவர்களை மீட்கக் கோரியும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் ஈடுபட்டனர்.




இதில் மண்டபம், இராமேஸ்வரம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் சீராக எரிபொருட்களை வழங்குவது தொடர்பில் விசேட கலந்துரையாடல்

## வீட்டுத் தேவைக்கு குடும்ப அட்டை மூலம் மண்ணெண்ணெய்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்தை எவ்வாறு சீரான முறையில் வழங்குவது குறித்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நேற்று (09) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்தை எவ்வாறு சீராக வழங்குவது தொடர்பாக நேற்றைய தினம் (09) பொலிஸ் அதிகாரிகள், மீனவர் சங்கங்கள், எரிபொருள் நிலையங்களின் உரிமையாளர்கள், அரச உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து சங்கங்களுக்கு எவ்வளவு எரிபொருள் கொடுக்கவேண்டும் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மக்களுக்கு எரிபொருட்கள் வழங்குவதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அவர்களுக்கான குடும்ப அட்டைகளை விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்ப அட்டையின் அடிப்படையில் இனிமேல் மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும். மண்ணெண்ணெய் மட்டுமல்ல, ஏனைய தேவைகளுக்கும் அந்த குடும்ப அட்டையை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலும் விவசாயத்திற்கு ஒரு ஏக்கருக்கு 3 உழவுக்கும் சேர்த்து 25 லீற்றர் டீசல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது உழவுக்கான 10 லீற்றர் டீசல் வழங்கி ஒரு வாரத்திற்கு பின்பு 2ஆவது மற்றும் 3ஆவது உழவிற்கு ஒரு வார கால இடைவெளியில் டீசல் வழங்கப்படும்.

அதற்கான எரிபொருள் நிலையங்களையும், கமநல சேவைகள் நிலையங்கள் அடிப்படையில் தெரிவுசெய்து பயனாளிகள் விபரம் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்படும். அதனடிப்படையில் பயனாளர்கள் எரிபொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கு எதிராக அக்கரைப்பற்றில் ஆர்ப்பாட்டம்

(ஆலையடிவேம்பு நிருபர்)




அக்கரைப்பற்றிலும் நேற்று அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகில் அராஜகத்திற்கு எதிராக அணி திரள்வோம் எனும் வாசகம் கொண்ட பதாகைகளை ஏந்திய இளைஞர்கள் பலர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.



காலிமுகத்திடலில் நேற்று ஏற்பட்ட அமைதியின்மை மற்றும் கலவரத்தை தொடர்ந்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வீதியின் மத்தியில் ரயர்கள் எரிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் நடைபெற்று வருகின்றது.

# மட்டக்களப்பில் அரச துறைகளுக்கு மாத்திரம் டீசல் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்







(மட்டக்களப்பு நிருபர்)

நாடு பூராகவும் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினை தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச முக்கிய துறைகளுக்கு மாத்திரம் டீசல் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் நேற்று (09) இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு தற்போது இல்லை என்றும் டீசலுக்கான தட்டுப்பாடே தற்போது நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மாவட்ட செயலகம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மின்சார சபை, மட்டக்களப்பு பொலிஸ் நிலையம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை ஆகிய அரச துறைகளுக்கு மாத்திரம் இன்று 10ஆம் திகதி முதல் விசேட சலுகை அடிப்படையில் டீசல் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந் உள்ளிட்ட மாவட்ட செயலக மற்றும் ஏனைய துறைசார் அரச திணைக்களங்களின் அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.







பதுர்பாபா பவுண்டேஷனின் முழுமையான அனுசரணையில் அவ்வமைப்பின் 1044ஆவது வேலைத்திட்டமாக பண்டாரவளை சேர் ராசிக் பரீட் தேசிய பாடசாலையில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான இலவச விஞ்ஞான பாட கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பதுர்பாபா பவுண்டேஷனின் ஸ்தாபகர் பதுர்பாபாவுக்கு பாடசாலை நிர்வாகத்தினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம்

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளத்தைச் சேர்ந்த மஹ்ரூப் சம்சுதீன், அகில இலங்கை சமாதான நீதவானாக புத்தளம் மாவட்ட மேலதிக நீதவான் அசேல த சில்வா முன்னிலையில் கடந்த 5ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், கஹட்டகஸ்திகிலியவைப் பிறப்பிடமாகவும், புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

கஹட்டகஸ்திகிலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) ஆரம்பக் கல்விமுதல் சாதாரணம் வரை கல்வி கற்றதுடன், மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரியில் உயர் கல்வியை தொடர்ந்துள்ளார்.

பட்டதாரியான இவர், பேராதனை பல்கலைக் கழகத்தில் அரசவியல் துறையில் இளமாணி பட்டப்படிப்பையும், முதுமாணி பட்டப் படிப்பையும் பூர்த்திசெய்துள்ளார்.

அத்தோடு, இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் ஏழு வருடங்களாக சமூக விஞ்ஞானத்துறை விரிவுரையாளராக கடமையாற்றிவந்த இவர், 15 வருடங்களுக்கு மேல் தன்னார்வ நிறுவனங்களோடு இணைந்து சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் மர்ஹூம்களான முஹைதீன் சம்சுதீன் மற்றும் லைலா உம்மா தம்பதிகளின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பயாகலவில் இரு தரப்பு மோதல்: ஒருவர் உயிரிழப்பு; நால்வர் காயம்!

பயாகல பிரதேசத்தில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் நால்வர் காயமடைந்துள்ளதாக பயாகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல, மில்லகஸ் உடுமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதுடன், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் நாகொடை பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவர் மருத்துமனைக்கு அழைத்துவரும் முன்னரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல, தங்வத்த, அக்கரவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பயாகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அருண ரணவீரவின் தலைமையில் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பெயர் மாற்றம்

கற்பிட்டி சின்னக்குடியிருப்பைச் சேர்ந்த "ரத்னசேகர ஆச்சாரிகே சுமனரத்ன சதுன் உதித்த ரத்ன" ஆகிய நான் கடந்த 2003ஆம் ஆண்டுமுதல் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை "மொஹமட் பயாஸ்" (Mohamed Fayas) என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

– மொஹமட் பயாஸ் –

## பொதுமக்களுக்கு தாழ்மையான அறிவித்தல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அறிவுறுத்தலுக்கு அமைய வெலிசறை நீதவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் 65010இல் 21.03.2022 அன்று முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மருந்துகளுக்கு அதிக விலை நிஉணயித்தல், அனுமதியின்றி விற்பனைசெய்தல் ஆகிய குற்றங்களுக்காக நான் தண்டனைக்குட்படுத்தப்பட்டேன். தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 2015 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கம் பிரிவு 131 (ii)(e) சட்ட அடிப்படையில் இனிமேல் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடமாட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் பொதுமக்களிடம் மன்னிப்புகோருகிறேன்.

ஆர். விக்ரமசூரிய
மருத்துவ அதிகாரி
72/1, புகையிரத வீதி, கந்தானை.


திகதி 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4756
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,646,230.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 4 5 7 7 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,825,052.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1244
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,865,920.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 0 5 3 2 7 7
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,226,158.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 786
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,359,440.00
வெற்றி இலக்கினம் A வெற்றி இலக்கங்கள் 22 34 45 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,192,502.80

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0065
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,226,536.20
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 14 19 33 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
ඉංග්‍රීසි අකුර Q සුපිරි අංකය 22 ජයග්‍රාහී අංක 17 31 46 57
රු. 3,035,080.00
රු. 251,171,674.00
රු. 10,000,000.00
රු. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொ.பே. : 011-4607000, 011 - 4607001 - 2
பெக்ஸ் : 011-4669475
Email : info@nlb.lk
Web : www.nlb.lk

# யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தம்

## பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரை நோயாளர்களின் சிகிச்சைக்குரிய மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களுக்கான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய தேவையான சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன், விசர் நாய்க்கடிக்கான மருந்து தட்டுப்பாடாக இருக்கிறது. எனவே, பொதுமக்கள் கவனமாக மிருகங்களிடம் கடிபடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில், விசர் நாய்க்கடி மருந்து என்பது ஒரு விலை உயர்ந்த மருந்தாகும். எனவே, அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் மிக கவனமாக இருக்கவேண்டும். அத்துடன், விபத்துகள் மற்றும் தேவையற்ற பிரச்சினைகள் மூலம் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்க்குமாறும் கோருகின்றோம். போதுமான அளவு சேவையினை வழங்க முடியாதுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுகாதார கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். எனவே, பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் எனவும் தெரிவித்தார்.



அத்தோடு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகளான ஏஆர்வி மற்றும் ஏஆர்எஸ் என்பவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

"நாய்களைக் கண்டால் விலகிச் செல்லுங்கள். நாய்க்கடிக்கு உள்ளாகினால் விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தட்டுப்பாட்டினால் உயிர்களைக் காப்பாற்ற முடியாது" என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்க்கடிக்கு உள்ளாகியவர்களுக்கு ஏஆர்பி மற்றும் ஏஆர்எஸ் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படாவிடின் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் போராட்டம்








(யாழ். நிருபர்)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கவனயீர்ப்புப் போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று (09) முன்னெடுக்கப்பட்டது.

"அடக்குமுறை ஊடாக தேசிய கொள்கைகளை அழித்து அக்கிரமத்தில் ஆட்சி செய்கின்ற அரசே மக்கள் அபிப்பிராயத்துக்கு தலைவணங்கு" எனக் கோரி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக காலை 9 மணியளவில் ஒன்றுகூடிய வைத்தியர்கள், பணியாளர்கள், ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாணத்திலுள்ள சகல அரச வைத்திய சாலைகளிலும் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

# ஆசிரியர்களுக்கு திறன் வகுப்பறை தொடர்பான செயலமர்வு





(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளான போக்கட்டி அ.த.க. மற்றும் கெற்பேலி அ.த.க. பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் (08) திறன் வகுப்பறை தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டது.போக்கட்டி அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளராக யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர் யோ. தனரூபன் கலந்துகொண்டு திறன்வகுப்பறை தொடர்பான தெளிவூட்டலை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தார்.

# கிளிநொச்சியில் நீரில் மூழ்கி மூவர் உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் நேற்று முன்தினம் (08) மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் பூம்புகார் கடல் மற்றும் மண்கும்பான்சாட்டி கடல் ஆகியவற்றில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அரியாலை பூம்புகார் கடலில் நீராடிய ஞானகாந்தன் ஜெயமதன் (வயது 36) என்பவரும் மண்கும்பான் சாட்டி கடலில் நீராடிய அரியாலையைச் சேர்ந்த இராசரத்தினம் கணேசராசா (வயது 46) என்பவரும் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, கிளிநொச்சி இரணைமடு குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மயூரன் (வயது 22) என்பவர் குளத்தில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

# சாவகச்சேரியில் இரத்ததான முகாம்







(சாவகச்சேரி நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (08) சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தேவாலய வளாகத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.காலை 9 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை இடம்பெற்ற இரத்ததான முகாமில் தேவாலய பங்குத்தந்தை ஞானரூபன், இளைஞர், யுவதிகள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.



நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் யா/ இந்து மகளிர் கல்லூரி மாணவிக்கு அவரது குடும்ப நிலை கருதி சைக்கிளொன்று வழங்கப்பட்டது.

# பெண்ணொருவரின் முறைப்பாட்டுக்கமைய வீடொன்றிலிருந்து இரு வாள்கள் மீட்பு

## குற்றச்சாட்டில் தந்தை – மகன் கைது!

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் இரு வாள்கள் மீட்கப்பட்டன என்றும், அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தந்தை மற்றும் மகன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் கணவர் தகராறில் ஈடுபடுகின்றார் என்று மனைவியால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய குறித்த வீட்டுக்கு பொலிஸார் சென்றபோதே இரு வாள்களும் மீட்கப்பட்டன. அதையடுத்து தந்தை மற்றும் மகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்ணெண்ணெய்க்காக பெருந்திரளானோர் எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தைச்சூழ நீண்ட வரிசையில் காத்திருப்பு










(க.கிஷாந்தன்)

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக ஹட்டன், மல்லியப்பு பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தை சூழ, நேற்று(09) காலை 6மணி முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதன்போது சிறார்கள், யுவதிகள், தாய்மார் மற்றும் முதியவர்கள் என பெரும்பாலானோர் வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும் சில தாய்மார்கள் தமது கைக்குழந்தைகளுடன் வரிசையில் நின்றுக்கொண்டிருந்தனர்.

கைக்குழந்தைகளுடன் வந்திருந்த தாய்மார்களும் முதியவர்களும் தமக்கு மயக்கம் வருவதுபோல் இருப்பதாகவும், எனவே, முன்னுரிமையின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குமாறும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

சிறார்கள் பாடசாலைகளுக்கு செல்லாமலும், தோட்டத் தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லாமலுமே மண்ணெண்ணெய் வாங்குவதற்காக காலை முதல் வரிசையில் காத்திருப்பதாக தெரிவிக்கின்றனர்.

# விவசாயத்துக்கு எரிபொருள்கோரி தம்புள்ளையில் ஆர்ப்பாட்டம்



(கண்டி நிருபர்)

தமது விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளை கொள்கலன்களில் பெற்றுத்தருமாறுகோரி தம்புள்ளை பிரதேச விவசாயிகள் நேற்று முன்தினம்(08) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக கண்டி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் இடைக்கிடை வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டது.

இயந்திரங்களில் திரவங்களை விசுருவதற்கும், உழவு வண்டிகள் போன்றவற்றை பயன்படுத்துவதற்கும் மற்றும் பல்வேறு விவசாயத் தேவைகளுக்கு வயல்வெளிக்கு எடுத்துச் செல்ல கொள்கலன்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றை விநியோகிக்க வேண்டும் எனவும் அவர்கள் பாதையை மறித்து கோரிக்கை விடுத்தனர்.





இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நுவரெலியா கிளையின் ஊடாக மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலைக்கு நேற்று நீர் வடிகட்டி இயந்திரம் வழங்கப்பட்டதோடு வைத்தியசாலை வளாகத்தில் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. இதன்போது செஞ்சிலுவை சங்கத்தின் நுவரெலியா மாவட்ட அதிகாரி சமன் சந்திரசிறி மற்றும் மாவட்ட வைத்திய அதிகாரி ஜ.இர்ஜாட், வைத்திய அதிகாரி பாகிமா மற்றும் தாதியர்களும் கலந்து கொண்டனர். (செ.தி.பெருமாள்)







மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக நுவரெலியா கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு நுவரெலியா வலயக்கல்வி காரியாலயத்திலும் தலவாக்கலை தேசிய பாடசாலையிலும் நடைபெற்றது. இதன்போது மத்திய மாகாண கல்விப் பணிமனையின் ஆங்கில பாடப் பணிப்பாளர் சாமரி அன்தாஜ், நுவரெலியா கல்வி வலய ஆங்கிலப் பாட உதவி கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார் மற்றும் வளவாளர்கள் உட்பட ஆங்கில ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (தலவாக்கலை நிருபர்)








ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிவிலகிச் செல்லுமாறுகோரி நுவரெலியா - வெளிமட வீதியில் மத்திய சந்தைக்கு அருகாமையில் நுவரெலியா இளைஞர் யுவதிகளால் கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'கோட்டா கோ கம' தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை படங்களில் காணலாம். (செ.திவாகரன், பி.கேதீஷ்)

# தமிழர்களுக்கு இழைத்த வினையின் பயனே இன்று நாட்டின் தலைவரை நிம்மதியிழக்கச் செய்திருக்கிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள். அதுதான் இந்த நாட்டில் இன்று நடந்துகொண்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இழைத்த வினை, இந்த நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழமுடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கறைப்பற்று கோளாவில் அறுத்தநாக் கோட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஓராண்டு நிறைவு விழாவில் நேற்று (09) அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சமூகத்தில் ஆன்மீகக் கருத்துகளை எடுத்துச்செல்லக்கூடிய இளைஞர்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காலகட்டத்தில் கோளாவில் பிரதேசத்தில் எமது இனம், மதம், சமூகத்திற்காக முன்நின்று உழைக்கும் இளைஞர்களைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைகின்றேன். நிச்சயமாக இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக எமது சமூகத்தை வழிநடத்துவார்கள்.

எமது தமிழுக்காகவும், சமூகத்துக்காகவும், மதத்துக்காகவும் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்களோ, இதே அடிப்படையில் எமது மண்ணில் தமிழ் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டு வருகின்றது. அதற்கான பலத்தைச் சேர்ப்பவர்களாக நீங்கள் இருந்துகொண்டிருக்கின்றீர்கள்.

இந்து மதம் காலத்தால் முற்பட்டது. ஆனால், எந்த இடத்திலும் எமது மதத்திற்கான தனித்துவம் இல்லை என்பதுதான் இன்று ஒரு மனவேதனையான விடயம். இந்த நாட்டில் பூர்வீகக் குடிகளாக இருக்கின்ற எமது இனத்திற்கும் மதத்திற்கும் ஓர் அந்தஸ்து இல்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் இன்று எமது மத ரீதியான அடையாளங்கள் அழிக்கப்பட்டு மாற்று மதத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வரலாறுகள் அதிகம் இருக்கின்றன. உதாரணமாக, கதிர்காமத்தைச் சொல்லலாம். தேவார, புராணங்களில் பாடப்பட்ட கதிர்காமத்தில் தற்போது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது?



தற்போதைய இந்த நாட்டின் அரச தலைவர்தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர், தான் பெரும்பானன்மை மக்களின் வாக்குகளைப் பெற்றவன், இது ஒரு பௌத்த நாடு என்ற ஆணவப் போக்கை அன்று ஆரம்பித்தார். ஆனால், இன்று அவரின் நிலை என்ன? நாட்டின் அனைத்து பக்கங்களிலும் அவருக்கான எதிர்ப்பலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. அவர் நல்ல மனநோக்கோடு இந்த நாடடின் பொறுப்பை எடுக்கவில்லை. இந்த நாட்டை நாசம் செய்ய வேண்டும் என்றேதான் இந்த நாட்டின் தலைவராக உருவாக்கப்பட்டார். இன்று இந்த நாட்டை நாசம் செய்து அழித்த ஒரு தலைவராக அனைத்து இன மக்களாலும் பார்க்கப்படும் தலைவராகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திகழ்கின்றார்.

தற்போது நாடாளுமன்றத்தில் என்ன நடக்கின்றது என அனைவரும் அறிவார்கள். எமது இனத்தின் விடயங்களை நாங்கள் பேசுகின்றபோது நாட்டில் தற்போது பொருளாதார ரீதியான பிரச்சினைகள், நிர்வாக நடைமுறைகள் சீராக இல்லை என்ற நிலைமைகள் எழுந்துள்ளன. ஒரு நாட்டுக்குப் பொருத்தமான ஒரு தலைவர் கிடைக்க வேண்டும். அவ்வாறானதொரு தலைவர் இலங்கைக்கு கிடைக்கப்பெறவில்லை. அதனால் நாங்கள் இன்று மோசமான துன்பங்களை அடைந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நாடு ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும். அதற்கு மூவின மக்களும் ஒன்றுபட வேண்டும். அந்த ஒற்றுமையின் மூலம் இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகி ஒரு பொதுவான ஆட்சி உருவாக்கப்படுகின்றபோதுதான் இந்த நாட்டின் பெருளாதாரம் மேலோங்கி வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

ஆனால், இதே நிலைமை நீடித்தால் போகின்ற போக்கில் எதிர்காலத்தில் அரச உத்தியோகத்தர்களுக்குக் கூட சம்பளம் வழங்கமுடியாத ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்தியா என்கின்ற நாடு நேசக்கரம் நீட்டவில்லை என்றால் இந்த நாட்டின் நிலை இன்னும் படுமோசமாக இருந்திருக்கும் என்று தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கிழக்கில் வித்தியாரம்ப நிகழ்வுகள்





நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப விழாவிற்கு பிரதம அதிதியாக வருகை தந்த பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் எஸ்.சிராஜுதீன் அழைத்துச் செல்லப்படுவதையும் அனுமதிபெற்ற மாணவர்களை அதிபர், ஆசிரியர் சகிதம் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)





கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தி/கிண்ணியா அல்-அதான் மகாவித்தியாலயத்தின் தரம்-1இற்கான புதிய மாணவர்களை அனுமதிக்கும் வரவேற்கும் நிகழ்வு நேற்று (09) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஏ.அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இவ்வித்தியாரம்ப நிகழ்வில் புதிய மாணவர்கள் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டனர். இதில் பிரதம விருந்தினராக அல்-ஹிக்மா பவுண்டேசனின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் இபாதுல்லா அப்பாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் றியாத் ஹசன் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (கிண்ணியா நிருபர்)







காத்தான்குடி மட்/மம/ ஹிழுறிய்யா வித்தியாலத்தின் 2022ஆம் வருடத்திற்கான முதலாம் தர வகுப்பு பாலர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ்.ஐ.யாசீர் அரபாத் தலைமையில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.எச்.எம்.ரிஸ்வி, மட்டக்களப்பு 38ஆவது மாணவர் சிப்பாய் படையணியின் ஆணையிடும் அதிகாரி லெப்டினட் கேர்ணல் ஜீ.டப்ளியூ.ஜீ.எச்.நிலந்த ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், பொறியியலாளர் ஏ.எல்.எம்.ரிஸாத் கௌரவ அதியாக கலந்துகொண்டு பாலர்களை வரவேற்று ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி நிருபர்)



பாலமுனை உதுமாபுர தாறுல் ஹஸனாத் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வித்தியாரம்ப விழா பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அபாஹீல்பான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா அனஸ் பிரதம அதிதியாகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம்.றிபாஸ்டீன், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலையின் பீ.எஸ்.ஐ.இணைப்பாளர் மௌலவி என்.நசீர், ஹாஜி பவுண்டேசன் அமைப்பின் தலைவரும் சமூக சேவையாளருமான எம்.ஐ.அர்சாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.அன்சார் உட்பட பள்ளிவாசல் தலைவர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர் பழைய மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். இதன்போது பாடசாலையில் தரம் ஒன்றுக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தரம் இரண்டு மாணவர்களினால் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டதுடன், மாணவர்களின் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (பாலமுனை நிருபர்)







சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தரம் -1இறகு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா கடந்த வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. "சாதனைகள் படைக்க வரும் அன்புச் செல்வங்களை அன்புடன் வரவேற்கின்றோம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக், கல்முனை கல்வி வலய பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் ஏ.எல்.றிப்கா அன்ஸார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். பாடசாலையின் உதவி அதிபர்களான எம்.எச்.நுஸ்ரத் பேகம், எம்.எவ்.ஐனூல் மர்சூனா, தரம் 1, 2 பிரிவின் பகுதித் தலைவர் டில்ஸானா கலீல், பெண்கள் பிரிவின் பகுதித் தலைவர் ஜெஸீமா ரஷீட், ஒழுக்காற்று பிரிவின் தலைவர் ஏ.எம்.ஜாஸீர் உட்பட பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் நலன்விரும்பிகள், பெற்றோர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், அதிதிகளால் மாணவர்களுக்கு அகரம் எழுதப்பழக்கிய நிகழ்வும் இடம்பெற்ற அதேவேளை, மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் இனிப்புகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், பாடசாலையில் தரம் 2இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாலை அணிவித்து புதிதாக அனுமதிபெற்ற சுமார் 250இற்கு மேற்பட்ட தரம்-1 மாணவர்களை வரவேற்றதோடு, தரம்-2 மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் சபையோரை மகிழ்வித்து மிகுந்த பாராட்டை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (எம்.எஸ்.எம்.ஸாகிர்)





ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் தரம்-6 புதிய மாணவர்களை வரவேற்கும் விசேட நிகழ்வு நேற்று (09) பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் யூ.கே.அப்துர் ரஹீம் தலைமையில், உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீமின் வழிநடத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தரம்-6 புதிய மாணவர்களை தரம்-7 மாணவர்கள் மலர் தூவி இனிப்புகள் வழங்கி வரவேற்றனர். கவிஞர், சிரேஷ்ட ஆசிரியர் ஜே.வஹாப்டீனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர் கைறுந்நிஸா, உதவி அதிபர் முஹம்மட் றினீஸ் ஆகியோருடன் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். (அட்டப்பள்ளம் நிருபர்)

# சாய்ந்தமருது விலங்கறுமனையில் துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித விஞ்ஞான காரணங்களையும் காணவில்லை

## விஜயம்செய்த சுகாதாரத்துறையினர் தெரிவிப்பு




(கல்முனை, மாளிகைக்காடு நிருபர்கள்)

சாய்ந்தமருது விலங்கறுமனைக்கு களவிஜயம் மேற்கொள்ளப்பட்ட நேரம் விலங்கறுமனையில் பாரியளவிலான துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித விஞ்ஞானரீதியிலான காரணங்களுமில்லை என்பதை தான் கண்ணுற்றதாகவும் இந்த விஜயத்தின் மூலம் எவ்வாறு குறித்த விலங்கறுமனையை மேலும் சிறப்பாகவும், மேம்பட்ட சுகாதார வழிமுறைகளை கையாள்வதன் மூலம் திறன்பட கொண்டு நடத்த முடியும் என்பது தொடர்பிலும் அறிக்கையொன்றை தயாரித்து கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவினரின் ஊடாக சிறப்பாகசெய்ய வழிவகைகளைசெய்ய எண்ணியுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் சில வாரங்களாக மாலை நேரத்தில் பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் தொடர்ந்தும் சுகாதார தரப்பினருக்கு முறைப்பாடுகளை தெரிவித்து வருவதுடன், இந்த துர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றம் என்றும் தெரிவித்ததுடன், இந்த துர்நாற்றம் காரணமாக குடியிருப்பு பிரதேசங்களில் பலத்த சங்கடங்களை அனுபவிப்பதாகவும், குறித்த பிரதேசத்திலிருந்து துர்நாற்றம் காரணமாக இடம்பெயரவேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர், பொலிஸார், ஊடகங்கள் எனப் பலரும் சென்ற வாரம் முழுவதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் களவிஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டும் அங்கிருந்து பாரியளவிலான தூர்நாற்றம் வெளிவர காரணிகள் இல்லையென்பதை அறிய முடிந்தது. இருந்தாலும் தொடர்ந்தும் வெளிவரும் துர்நாற்றத்திற்கான காரணம் கண்டறிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்திருந்த நிலையில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களால் முறைப்பாடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தலையிட்டு தீர்வை பெற்றுத்தரவேண்டும் என்று பொதுமக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டமைக்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் கள விஜயமொன்றை நேற்று (09) மதியம் மேற்கொண்டு விலங்கறுமனை நிலையை ஆராய்ந்தனர்.

இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்ட நேரம் விலங்கறுமனையில் பாரியளவிலான துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித விஞ்ஞான ரீதியிலான காரணங்களுமில்லை என்பதை தான் கண்ணுற்றதாகவும் இந்த விஜயத்தின் மூலம் எவ்வாறு குறித்த விலங்கறுமனையை மேலும் சிறப்பாகவும், மேம்பட்ட சுகாதார வழிமுறைகளை கையாள்வதன் மூலம் திறன்பட கொண்டுநடத்த முடியும் என்பது தொடர்பிலும் அறிக்கையொன்றை தயாரித்து கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவினரின் ஊடாக சிறப்பாகசெய்ய வழிவகைகளை செய்ய எண்ணியுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இந்த விலங்கறுமனை பிரதேசத்திற்குத் தேவையான ஒன்றாகும். இந்த விலங்கறுமனை இல்லாதிருந்திருந்தால் பலத்த சுகாதார சீர்கேடுகளை இந்த பிராந்தியம் சந்தித்திருக்க நேரிட்டிருக்கும். இருந்தாலும் அரச சுகாதார வழிகாட்டல்கள், நவீன தொழில்நுட்பம், மற்றும் உயரிய சுகாதர வழிகாட்டல்களுடன் இந்த விலங்கறுமனை நடத்திச்செல்லப்பட வேண்டும். அதற்கான சகல ஆலோசனைகளையும், மேற்பார்வைகளையும் செய்ய கல்முனை மாநகர சபையுடன் இணைந்து எங்களின் பணிமனை எப்போதும் தயார் நிலையில் உள்ளது என்றார்.

# ஹெரோயினுடன் கிண்ணியாவில் ஒருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மிகிந்தபுர பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் இளைஞரொருவரை நேற்று முன்தினம் இரவு (08) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 10 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கிண்ணியா - அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீண்டநாட்களாக கிண்ணியா பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்துவந்த நிலையில், குறித்து நபரை பின்தொடர்ந்த பொலிஸார் அவரை சோதனையிட்டபோது, அவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டதாகவும் கிண்ணியா பொலிஸாரினால் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் இரண்டு வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# காரைதீவு கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைக்கழிவு

(காரைதீவு நிருபர்)

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை அரசாங்க கட்டுப்பாட்டு விலைக்கு பகிர்ந்தளிக்கும் துரித வேலைத்திட்டம் காரைதீவு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டின் தனியார் வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளானது தற்போது சடுதியாக அதிகரித்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மக்களுக்கு நன்மை கிடைக்க எமது நிறுவனம் ரத்தி மா 400 கிராம் 530/=, தேயிலை 200 கிராம் 230/=, தீப்பெட்டி 10/=, சீனி ஆகிய உலருணவுப் பொருட்களுக்கான பொதிகள் தயாரிக்கப்பட்டு 1000 ரூபா பெறுமதிக்கு அரசாங்க நிர்ணய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் தெரிவித்தனர்.






# மட்டு. புளியடிக்குடா புனித செபஸ்தியார் பேராலய 104ஆவது வருடாந்தப் பெருவிழா!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் பேராலய 104ஆவது வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 5.15 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளாரின் தலைமையில் திருச்செபமாலையைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நவநாட்களில் தினமும் 5.30 மணிக்கு திருச்செபமாலை, பிரார்த்தனை மற்றும் நவநாள் திருப்பலி ஆகியன இடம்பெறவுள்ளன. அத்தோடு 21ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 7.00 மணிக்கு முதல் நன்மை மற்றும் உறுதிப்பூசுதல், அருட்சாதனம் வழங்கும் திருப்பலியானது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கு திருச்சொரூபப் பவனி வழமையான வீதிகளூடாக பயணிக்கவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும், காலை 7.00 மணிக்கு பெருவிழாக் கூட்டுத் திருப்பலியும் இடம்பெற்று, இறுதி ஆசிருடன் கொடியிறக்கப்படும்.

நவநாட் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி ரீ.சகாயநாதன், றொசான் சுவைக்கீன், லெபோன் சுதன், ஏ.தேவதாசன், ஏ.ஜென்சன் லொயிட், எஸ்.ஜே.சுலக்ஷன், சீ.வி.அன்னதாஸ், எஸ்.ஜோசப் அற்புதராஜ் மற்றும் அருட்தந்தை நிர்மல் சூசைராஜ் ஆகியோரால் சிறப்பு அருளுரைகளுடன், திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போடியார் புலம்பல்!



மஹிந்த அம்மாச்சி பதவி விலகினாலும் சஜீத்திற எதிர்க்கட்சித் தலைவர் பதவிதான் பறிபோகும் போல. பாவம் தம்பி சஜீத்து. பிரதமர் பதவியும் இல்லாம எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாம சும்மாதான் காலத்த கடத்தபோறாரு. அவருட ராசிப்பலன் எம்.பி. பதவி மட்டும்தான் பிரதமராக வாறத்துக்கு எல்லாரும் பின்னடிக்கிற பார்த்தா கஜேந்திரகுமார் சொன்னதப்போல நாடாளுமன்றத்த கலைக்கவேண்டியதுதான் மெய்யா மெய்யா சரி எலுவா..?

# அம்பாறை மாவட்டத்தில் பச்சைப்பயறு பயிர்ச்செய்கை

(நிந்தவூர் நிருபர்)

நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலங்களில், இடைப்போகத்தில் பச்சைப் பயறு பயிச்செய்கையை மேற்கொள்ள அம்பாறை மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நீர்ப்பாசன வசதியின்மையால், சிறுபோகத்தில் நெற்பயிர் செய்கையில் ஈடுபட முடியாத மேட்டு நிலங்களில் மேலதிக பயிராகப் பச்சைப் பயறை பயிரிடும்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான உதவிகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

பச்சைப் பயறு அறுவடையின் பின்னர் அதற்கான சிறந்த சந்தை வாய்ப்பையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளையும் விவசாய திணைக்கள் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை சாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர் ஹுசைன் காலமானார்

(மாளிகைக்காடு நிருபர்)



கல்முனை சாஹிரா கல்லூரியின் ஆசிரியராக பல வருடங்கள் பணி புரிந்ததுடன், அதிபராக சுமார் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றி ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் ஏ.எம்.ஹுசைன் நேற்று காலமானார்.

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் வளர்ச்சியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக இருந்து அப்பாடசாலைக்கு பாரியளவிலான பங்களிப்பை செய்தவர்.

குறிப்பாக, பல பௌதீக வள அபிவிருத்திகள் மட்டுமல்லாது, பல்கலைக்கழகத் தெரிவு, விளையாட்டுத்துறை மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் இப்பாடசாலை அன்று உச்சத்தை அடைவதற்குப் பாடுபட்டவர்.

இவருடைய காலத்தில் இக்கல்லூரி வளர்ச்சிப் பாதையில் சென்றதுடன், அன்னாரது நிர்வாக மற்றும் செயற்திறன் மிக்க செயற்பாடுகள் இன்றும் அப்பாடசாலையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை மறுக்க முடியாத உண்மை. அன்னாரின் ஜனாஸா நேற்று (09) காலை 9.00 மணியளவில் சாய்ந்தமருது தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(மண்டூர் நிருபர்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பாலமுனை பிரதேசத்தில் தன்வசம் கஞ்சாவை வைத்திருந்த நபரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (08) கைதுசெய்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபரின் வீட்டுக்குச்சென்று சோதனையிட்டபோது தன்வசம் 160 கிராம் கஞ்சாவினை கைப்பற்றியதுடன், குறித்த நபரையும் கைதுசெய்து வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்த நபரை களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது நாளைவரை (11) விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளதுடன், சம்பவம் பற்றிய விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் எரிபொருளுக்காக நீண்ட வரிசை



(கிண்ணியா நிருபர்)

எரிபொருட்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்கள் ஏற்படுகின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக திருகோணமலை மாவட்டத்திலும் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதில் நீண்ட வரிசை காணப்படுகிறது.

பெற்றோல் மற்றும் டீசலை பெறுவதற்காகவும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சிலவேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளின்மை மூடிக்காணப்படுகிறது.

திருகோணமலை நகர், மூதூர், கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, கந்தளாய் உள்ளிட்ட பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நேற்று (09) திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் பெற்றோலை பெறுவதற்காக நீண்டவரிசை காணப்படுகிறது. ஆனாலும் டீசல் இன்மை காரணமாக பாதையோரங்களில் வாகனங்கள் பல நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டுள்ளன.





பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப் தலைமையிலான வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கடந்த சனிக்கிழமை (07) விஜயம் மேற்கொண்டனர். இதன்போது குறித்த குழுவினர் அம்பாறை பொது வைத்தியசாலையில் உள்ள சிகிச்சைப் பிரிவுகள், மருத்துவ ஆய்வுகூடம், விடுதிகள் என பல பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

(பொத்துவில் நிருபர்)

# கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக மருதமுனை அப்துல் மூஹிர் சத்தியப்பிரமாணம்

(மருதமுனை நிருபர்)

கல்முனை மாநகர சபைக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புதிய உறுப்பினராக மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.அப்துல் மூஹிர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதியும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவரும் (கிழக்கு வலயம்) சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம்.ஜமீல் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை (2022.04.30) இரவு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினராகக் கடமையாற்றிய பி.எம்.ஷிபான் இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், கட்சியின் செயலாளர் சுபைதீன் ஆகியோரினால் புதிய உறுப்பினராக ஏ.எச்.அப்துல் மூஹிர் நியமிக்கப்பட்டுள்ளார்.



# ராஜபக்ஷ சகோதரர்களை அகற்ற இந்தியாவின் அழுத்தம் அவசியம்

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்து



இலங்கை ஆட்சிப் பொறுப்பிலிருந்து ராஜபக்ஷ சகோதரர்களை அகற்ற உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, சிங்கள மக்களிடையே இனவெறியைத் தூண்டி, தேர்தலில் வாக்குகளைப் பெற்று, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த குடியரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தவறான கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக அந்த நாடு கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது.

இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கு ஒரே தீர்வு, ராஜபக்ஷ சகோதரர்கள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். அந்தக் கோரிக்கையை முன்வைத்து, நாளுக்குநாள் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. போராட்டங்களை ஒடுக்குவதற்கு, அவசர நிலையை அறிவித்த கோட்டாபய அதைத் திரும்பப் பெற்றார். ஆனால், மீண்டும் அவசர நிலையை அறிவித்திருக்கின்றார். அதற்கு, ஐரோப்பிய நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து ராஜபக்ஷக்கள் வெளியேறுமாறு, இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கை தமிழ் அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. எனவே, இலங்கை ஆட்சிப் பொறுப்பிலிருந்து ராஜபக்ஷ சகோதரர்கள் விலகுவதற்கு, அவர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.



# 26ஆவது தடவையாக எவரெஸ்ட் ஏறி சாதனை

நேபாளத்தில் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 52 வயதான நபர் உலகின் மிகப்பெரிய மலைச் சிகரமான எவரெஸ்ட்டில் 26ஆவது முறையாக ஏறி சாதனை படைத்துள்ளார்.

அந்நாட்டில் உலகின் எட்டு உயரமான மலைச்சிகரங்கள் உள்ளன. கொரோனா பரவல் காரணமாக இங்கு மலையேற வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. மலைச் சிகரங்களில் ஏற கடந்த ஆண்டுமுதல் அவர்கள் மீண்டும் அனுமதிக்கப்பட்டனர். உலகின் மிக உயரமான மலைச் சிகரமான எவரெஸ்ட்டில் ஏற 316 பேருக்கு நேபாள அரசு இந்த ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில், நேபாளத்தைச் சேர்ந்த கமி ரீட்டா என்ற 52 வயது நபர் எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் 26ஆவது முறையாக ஏறி தன் பழைய சாதனையை முறியடித்துள்ளார். இவர் 'ஷெர்பா' எனப்படும் இமய மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

இத்தாலியின் பிரபல மொடல் அழகியும் பாடகியுமான எம்மா மெஸ்கட், 66ஆவது யுரோவர்சன் பாடல் நிகழ்வில் கலந்துகொண்டபோது பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.





## இரு முதற்பெண்மணிகளின் சந்திப்பு

உக்ரைனுக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பாரியார் ஜில் பைடன், உக்ரைனின் முதல் பெண்மணி ஒலெனா ஸெலென்ஸ்கியை அன்னையர் தினத்தில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# உலகின் உயரமான நாய் சியஸ்!

உலகின் பல்வேறு சாதனைகளை அறிவிக்கும் கின்னஸ் உலக சாதனை அமைப்பு உலகின் மிக உயரமான நாய் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள பெட்போர்ட்டில் வசிக்கும் இரண்டு வயதான கிரெட் டேன் ரக நாய்தான் உலகின் மிக உயரமான நாய் என கின்னஸ் அறிவித்துள்ளது.



இதன் உரிமையாளரான பிரிட்டானி என்ற பெண் இதற்கு சியஸ் (Zeus) எனப் பெயரிட்டுள்ளார்.

இந்த சியஸ் நாயின் உயரம் 03 அடி ஐந்து அங்குலமாகும். தனது செல்லப் பிராணிக்கு கிடைத்த மகுடத்தினால் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ள உரிமையாளர் பிரிட்டானி.

முதலில் இவருக்கு இவ்வளவு பெரிய நாயை வீட்டில் வளர்ப்பதற்கு பயமாக இருந்ததாகவும், ஆனால், பார்த்தவுடன் அதன் மேல் பாசம் வந்து மிகவும் பிடித்து போனதால் மறுகணம் யோசிக்காமல் சியஸை வாங்கிவிட்டதாகவும் கூறினார்.

பொதுவாக வேட்டையாடும் தன்மை கொண்டவை கிரேட் டேன் ரக நாய்கள். ஆனால், பிரிட்டானி வளர்க்கும் நாய் எப்போதும் அமைதியாக இருக்குமாம் என உரிமையாளர் கூறுகிறார்.

# ஜப்பானில் நிலநடுக்கம்

தென்மேற்கு ஜப்பான் மற்றும் கிழக்கு தாய்வான் இடையே சக்திவாய்ந்த நிலநடுக்கம் நேற்றுக் காலை ஏற்பட்டது. இந்த பலத்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது.

ஜப்பானில் யோனாகுனி நகரிலிருந்து தென்மேற்கே 30 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கிழக்கு தாய்வானுக்கும் தென்மேற்கு ஜப்பானுக்கும் இடையே வலுவான நிலநடுக்கம் உணரப்பட்டிருக்கிறது.

இதனால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையென இருநாடுகளும் அறிவித்துள்ளன. ஜப்பான் கடற்பரப்பே நிலநடுக்கத்தில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதால் சுனாமி எச்சரிக்கை விடப்படும் என எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'அசானி' புயல் தமிழகத்தை தாக்கும்!



வங்கக்கடலில் உருவாகியுள்ள 'அசானி' புயல் தீவிரமடைந்துவரும் நிலையில், தமிழகத்தில் 14 மாவட்டங்களில் அடைமழை பெய்வதற்கான வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், தென்கிழக்கு வங்கக்கடலில் அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து அசானி புயலாக வலுவடைந்துள்ளது.

இது படிப்படியாக தீவிரமடைந்து, வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திரா, ஒடிசா கடற்கரையை நாளை (இன்று) மாலை நெருங்கலாம்.

அசானி புயல், ஆந்திரா மற்றும் ஒடிசா கடற்கரையையொட்டி கடலிலேயே பயணிக்கும். கரையை கடக்காது. அதேநேரத்தில், கடலில் பலத்த காற்று வீசும் என்பதால், மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம். அசானி புயல் காரணமாக, தமிழகத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, திருப்பூர், கோவை ஆகிய 14 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடைமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனில் பாடசாலை கட்டடம் மீது ரஷ்யப் படையினர் கடும் தாக்குதல்



## 60 பேர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிப்பு

உக்ரைனின் லுஹான்ஸ்க் பகுதியிலுள்ள பாடசாலைக் கட்டடம மீது ரஷ்யப் படையினர் நடத்திய தாக்குதலில் 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனுக்குள் நுழைந்து ரஷ்யப் படையினர் 74 நாளாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். முதலில், தலைநகர் கீவ் உள்ளிட்ட பிரதான நகரங்களில் தாக்குதல் நடத்திவந்த ரஷ்யப் படையினர் தற்போது நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தாக்குதலிலிருந்து உயிர் பிழைக்க ஏராளமான மக்கள், கட்டடங்களுக்கு அடியிலுள்ள சுரங்கங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், லுஹான்ஸ்க் பகுதியிலுள்ள ஒரு பாடசாலை மீது ரஷ்யப் படையினர் குண்டுகளை வீசி நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில், 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுகுறித்து, லுஹான்ஸ்க் மாகாண ஆளுநர் செர்ஹி ஹைடே கூறியதாவது, லுஹான்ஸ்க் மாகாணத்தின் பிலோஹோரிவ்கா கிராமத்திலுள்ள பாடசாலை மீது ரஷ்யப் படையினர் குண்டுகள் வீசியதில் அந்த கட்டடம் பெரும் சேதமடைந்தது.

அதில், 90இற்கும் மேற்பட்ட மக்கள் தஞ்சமடைந்திருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்ட இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர் அதில் சிக்கியிருந்த 30 பேரை பாதுகாப்பாக மீட்டனர். மீதமுள்ள 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.



# எல்லே சம்பியனான பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம்



(பாலமுனை, அட்டாளைச்சேனை நிருபர்கள்)

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டியான எல்லே போட்டியில் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம் 2022ஆம் ஆண்டுக்கான எல்லே சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மின்ஹாஜ் தேசிய பாடசாலை அணியினருக்கும் ஒலுவில் அல்- ஹம்றா தேசிய பாடசாலை அணியினருக்குமான இறுதிப் போட்டியில் 5-2 என்ற அடிப்படையில் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது. அக்கரைப்பற்று வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஜெமில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஆசிரிய ஆலோசகர் எம்.எச். ஹம்மாத், ஆசிரியர்களான ஜே. பஸ்மிர், எம்.எச். தபுறானி, எஸ்.எல்.எம். ஹாஸிக் பயிற்றுவிப்பாளர்களான ஜே. சபான், ஏ.எம். இர்சாத், எம். சாஜின், மின்ஹாஜ் தேசிய பாடசாலையின் பொறுப்பாசிரியர்களான ஐ.எல்.எம். பாயிஸ், எம்.எம். முபீர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவன் அம்பாறை மாவட்ட அணிக்குத் தெரிவு

(நிந்தவூர் நிருபர்)



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவரும், அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகத்தின் கடின பந்து கிரிக்கெட் வீரருமான ஜே.எம். ஷக்கிப் அம்பாறை மாவட்ட 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்குத் தெரிவாகியுள்ளார்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கிரிக்கெட் அணிக்காக விளையாடிவரும் ஜே.எம். ஷக்கிப் லக்கி விளையாட்டுக் கழகத்தின் மூன்றாம் நிலை துடுப்பாட்ட வீரராக தனது திறமையை தொடர்ந்தும் நிரூபித்து வருகின்றார்.

16 வயதுடைய ஜே.எம். ஷக்கிப் கிரிக்கெட் விளையாட்டில் இளம் வயதிலிருந்தே ஆர்வமுள்ளவராக இருந்துள்ளதுடன், கொழும்பு டி.எஸ் சேனாநாயக்க வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலங்களில் கடின பந்து கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடியுள்ளார். சிறப்பான துடுப்பாட்ட வீரராக காணப்படும் ஷக்கிப் சிறந்த விக்கெட் காப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட 19 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 13 வீரர்களில் ஷக்கிப் உள்வாங்கப்பட்டுள்ளார்.




# ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு பெரும் பின்னடைவு

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் முக்கிய அதிரடி துடுப்பாட்ட வீரரான மேற்கிந்திய தீவுகளை சேர்ந்த சிம்றொன் ஹெட்மயர் சொந்த நாட்டுக்கு திரும்பியுள்ளமை அந்த அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதிரடி துடுப்பாட்ட வீரரான 25 வயதான ஹெட்மயர், ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். 11 ஆட்டங்களில் 291 ஓட்டங்கள் (சராசரி 72.75) சேர்த்துள்ள அவர் அந்த அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றியுள்ளார். இதில் 7 ஆட்டங்களில் ஆட்டமிழக்காமலும் இருந்துள்ளார்.

இந்நிலையில் நிறைமாத கர்ப்பிணியாக உள்ள அவரது மனைவி நிவானிக்கு குழந்தை பிறக்க இருப்பதால் ஹெட்மயர் நேற்று முன்தினம் காலை தாயகம் புறப்பட்டுச் சென்றார். இது அவருக்கு முதல் குழந்தையாகும். கொரோனா தடுப்புப் பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியேறியுள்ள அவர் விரைவில் அணியுடன் இணைவதை எதிர்நோக்கி உள்ளதாக ராஜஸ்தான் நிர்வாகம் தெரிவித்துள்ளது. என்றாலும் சில ஆட்டங்களை அவர் தவற விடுவது அந்த அணிக்கு பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை.



# ஆட்டம் காட்ட ஆரம்பித்த ஹசரங்க

வனிந்து ஹசரங்கவின் 5 விக்கெட் உதவியுடன் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி அபார வெற்றி ஒன்றை பதிவு செய்ததுடன், நடப்பு ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர் பட்டியலில் வனிந்து ஹசரங்க இரண்டாமிடத்திற்கும் முன்னேறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளரான வனிந்து ஹசரங்க கடந்த ஆண்டு முதல் ஐ.பி.எல். தொடரில் ஆடிவருகிறார். கடந்த ஆண்டு ஒரு சில போட்டிகளில் ஆடிய ஹசரங்க, இந்த ஆண்டு பெங்களூர் அணியில் முக்கிய வீரராக ஒவ்வொரு போட்டிகளிலும் விளையாடி வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சன்ரைசர்ஸ் அணியுடனான போட்டியில் வெறும் 18 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைச் சாய்த்திருந்ததோடு, ஐ.பி.எல். போட்டிகளில் தன்னுடைய சிறந்த பந்துவீச்சு பிரதியினையும் பதிவு செய்திருந்தார்.

அன்று கைப்பற்றிய 5 விக்கெட்டுகளோடு மொத்தமாக 21 விக்கெட்டுகளை கைப்பற்றியிருக்கும் வனிந்து ஹசரங்க, நடப்பு ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் சஹாலை விட ஒரேயொரு விக்கெட்டிலேயே பின்தங்கியுள்ளார்.




# போதியளவு எரிவாயு இருப்பில் இல்லை!

## தேவையின்றி வரிசையில் காத்திருக்க வேண்டாமென லிட்ரோ நிறுவனம் கோரிக்கை



சமையல் எரிவாயுவை விநியோகிப்பதற்கு போதியளவு எரிவாயு தம்மிடம் இன்மையினால், தேவையின்றி வரிசைகளில் காத்திருக்க வேண்டாமென லிட்ரோ நிறுவனம் நுகர்வோரிடம் கோரியுள்ளது.

தேவையான அளவு சமையல் எரிவாயு இல்லை என்றும் அத்தியாவசிய சேவை மற்றும் தொழிற்துறைக்காக மாத்திரம் எரிவாயுவை விநியோகிப்பதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (08) இரவு எரிவாயுவை பெற்றுத்தருமாறுகோரி கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கொழும்பு, தெமட்டகொட சந்தி, பேஸ்லைன் வீதியை மறித்து நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான ஆர்ப்பாட்டம் இரவு வரை முன்னெடுக்கப்பட்டது.

மேலும், கொம்பனித்தெரு பிரதேசத்தில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இரவு வரை முன்னெடுக்கப்பட்டது. அதிவேக நெடுஞ்சாலை, நாவின்ன பிரதேசத்தில் வீதியை மறித்து சிலர் ஒன்பது மணிநேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மேலும், எரிவாயு எடுத்துச் சென்ற லொறியை வழிமறித்து பலவந்தமாக எரிவாயுவை பெற்றுக் கொண்ட சம்பவமொன்று ஆமர்வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சமையல் எரிவாயுவை பெற்றுத்தரக்கோரி பேலியகொடவில் மக்கள் ஆர்ப்பாட்டம்



பேலியகொட பிரதேசத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்த மக்களுக்கிடையில், நேற்று (09) முரண்பாட்டு நிலை உருவாகியிருந்தது.

இந்த குழப்பநிலையின் காரணமாக சிறிது நேரம் வாகன நெரிசலையும் அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எரிவாயுவை பெற்றுக்கொடுக்குமாறுகோரி வீதியை மறித்தால் எங்களை தாக்கும் நிலைமை இன்று காணப்படுகின்றது.

எரிவாயு இன்மையினாலேயே நாங்கள் இவ்வாறு வீதியில் நிற்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இருந்தபோதிலும், தற்போது மக்களுக்கிடையிலே தாக்கிக்கொள்ளும் நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. தடிகளால் தாக்கவும் முயற்சிப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் பொதுமக்களின் பரிசீலனைக்காக

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் நாடாளுமன்ற சுயாதீன உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தி அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்ட 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான இரண்டு தனி உறுப்பினர் சட்டமூலங்களையும் மூன்று மொழிகளிலும் நாடாளுமன்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அதற்குரிய இணைப்பு கீழே வழங்கப்பட்டுள்ளது.

https://www.parliament.lk/ta/const-amendment-proposals

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் இந்த தனி உறுப்பினர் சட்டமூலங்களை சபாநாயகரிடம் கையளித்தனர்.



19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை, திருத்தங்களுடன் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தமாகக் கொண்டுவருவதற்கு அண்மையில் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பினர்கள் கூடிய போது தீர்மானித்தனர். அதற்கமைய அது தொடர்பான முன்மொழிவுகளை வழங்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அறிவித்தார்.

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வரைபுகளிலுள்ள முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்கத்தினால் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக இந்த சட்டமூலங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தின் டொட்டஹன் வட்டார உள்ளூராட்சி உறுப்பினராக ஷஸ்னா முஸம்மில் தெரிவு

(அஷ்ரப் ஏ சமத்)

ஊவா மாகாணசபையின் ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் பெரோஸா முஸம்மிலின் மகள் ஷஸ்னா முஸம்மில் இங்கிலாந்தில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற டொட்டஹன் வட்டாரத்திற்கான உள்ளூராட்சித் தேர்தலில் கொன்சவேட் கட்சியின் ஊடாக போட்டியிட்டு கூடிய வாக்குகளைப் பெற்று அந்த வட்டார உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடமும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற மில்டன் நகரில் குறிப்பிட்ட தேர்தலில் போட்டியிட்டு 135 வாக்குகளினால் தோல்விகண்டார். இம்முறை டொட்டஹன் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அப்பிரதேசத்தில் இலங்கை வாக்காளர்கள் இல்லாதபோதிலும் இந் நகரை தெரிவுசெய்து அப் பிரதேசத்தில் தனது பிரசார சமூக சேவைகளைச் செய்து அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் மனதை வென்று வெற்றிபெற்றுள்ளார். இலங்கை முஸ்லிம் பெண் அதாவது ஐக்கிய இராச்சியத்தின் கொன்சவேட் கட்சியில் உறுப்புரிமை பெறுவது கஷ்டமாக இருந்தாலும் அவர்களது மனதை வென்று அதில் உறுப்புரிமை பெற்றது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.



இங்கிலாந்திலுள்ள திறந்த பல்கலைக்கழகத்திலுள்ள எம்.பி.ஏ மற்றும் எம்.எஸ்.சி பட்டப் படிப்புகளை நிறைவு செய்துள்ள ஷஸ்னா முஸம்மில் திறந்த பல்கலைக்கழகம் சமூக சேவை அமைப்புகளில் தொண்டராக பல்வேறு அமைப்புகளில் உறுப்பினராக இருந்து வயதுவந்தவர்களுக்கு உதவுதல், கெயினாஷ் இளைஞர் அமைப்பினூடாக சிறுவர்கள், சிறையிலுள்ள பெற்றோர்கள், அவர்களது குழந்தைகள் பராமரிப்பு போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகின்றார்.

அத்துடன் லண்டனில் கொவிட் -19 தொற்று நோய் சம்பந்தமான சுகாதார சங்கத்தில் இணைந்து வக்சின் வழங்கும் நிறுவனத்தின் தொண்டராகவும் அங்கு பணிபுரிந்து வருகின்றார்.

அயலவர்களின் நிலைமையினை மேம்படுத்துவதற்கு சிறிய மற்றும் பாரிய உள்நாட்டு வர்த்தகத்திற்கு உதவுபவர். இலங்கையில் கொழும்பு 7இல் உள்ள மகளிர் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்விகற்றவர். கொழும்பு மாநகர சபையில் அவரது தந்தை முஸம்மில் மேயராக இருந்த காலத்தில் அவரது பிரத்தியேக செயலாளராக கடமையாற்றினார்.

அத்துடன் இலங்கை பெண்கள் வியாபார அமைப்பின் 2018 பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். அமெரிக்க அமைப்பான வியாபார அமைப்பொன்றின் தூதுவர் பதவியையும் வகித்துள்ளார். கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இலங்கை வந்து பிரசாரப் பணிகளையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7